முச்சந்தி முரளி



"காக்காவுக்கு திரும்பவும் ஆட்சி எண்ட வடையைத் தூக்கிற ஆசை வந்திட்டு கண்டியளோ"

Registered as a Newspaper

பக்கங்கள் 16

விலை ரூ. 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 111

சனிக்கிழமை
16 மார்ச் 2024

பங்குனி 03 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055

வெடுக்குநாறிமலை ஆலய விவகாரம்:

# கைதானோரை விடுவிக்க தீவிரமடையும் போராட்டங்கள்

- நெடுங்கேணி பொலிஸ் நிலையம் முற்றுகை
- மனித உரிமைகள் ஆணைக்குழு முற்றுகை
- வர்த்தக நிலையங்கள் மூடல்
- நல்லூரிலிருந்து இன்று வாகனப் பேரணி



**யாழ்ப்பாணம், மார்ச் 16**

**வெடுக்குநாறிமலையில் கைது செய்யப்பட்டவர்களை விடுவிக்கக்கோரி மக்கள் போராட்டங்கள் தீவிரமடைந்துள்ளன. நெடுங்கேணியில் நேற்றுப் போராட்டம் இடம்பெற்ற நிலையில், நல்லூரிலிருந்து வவுனியா நோக்கி இன்று வாகனப் பேரணி நடைபெறவுள்ளது.**

02

## வழிபாட்டுரிமையைத் தடுத்தல் அடிப்படை உரிமை மீறலே

பல்கலைக்கழக ஊழியர் சங்கம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 16
அரசமைப்பின் கீழ் அடிப்படை உரிமைகளில் ஒன்றான வழிபாட்டுரிமை இலங்கையர் அனைவருக்கும் உள்ளது. அதனடிப்படையில் வெடுக்குநாறிமலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலய பக்தர்களின் வழிபாட்டுரிமையை யாரேனும் தடுத்தல் என்பது அடிப்படை உரிமை மீறலாகும் என யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊழியர் சங்கம் தெரிவித்துள்ளது.

02

## ஆட்சியைப் பிடிக்க பஸில் புதியதிட்டம்!



ஐக்கிய தேசியக் கட்சியையும் போட்டுத்தாக்குகிறார்!

கொழும்பு, மார்ச் 16
ஐக்கிய தேசியக் கட்சிக்கு மக்கள் பலமும் இல்லை, ஏற்பாட்டுப் பலமும் இல்லை என்று சாடியுள்ள பெரமுனவின் நிறுவுநர் பஸில் ராஜபக்ச, தேசிய மக்கள் சக்தி, ஐக்கிய மக்கள் சக்தி, பெரமுன ஆகிய மூன்றும் ஒன்றிணைய வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-
நாடு முழுவதும் சிறந்த ஏற்பாட்டு கட்டமைப்பு உள்ள பிரதான இரு கட்சிகள் நாட்டில் உள்ளன.

11

## கோத்தாவே குற்றவாளி

கண்டிக்கிறார் முன்னாள் சகா

கொழும்பு, மார்ச் 16
ஜனாதிபதி பதவியிலிருந்து தான் துரத்தப்பட்டமைக்கு தமிழர்களும், முஸ்லிம்களும் 'அரகலய' போராட்டத்தில் பங்கேற்றமையே காரணம் என முன்னாள்

02

## கொக்குத்தொடுவாய் புதைகுழி; கவனம் செலுத்தும் அமெரிக்கா

யாழ்ப்பாணம், மார்ச் 16
முல்லைத்தீவு, கொக்குத்தொடுவாய் புதைகுழி வழக்குடன் தொடர்புடைய சட்டத்தரணிகளை அமெரிக்கத் தூதரகத்தின் துணைத் தூதுவர் தலைமையிலான குழுவினர்

02

## இந்துக்களின் போரில் யாழ். இந்து ஆதிக்கம்



யாழ்ப்பாணம், மார்ச் 16
இந்துக்களின் போரின் முதலாவது நாள் ஆட்டத்தில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணி தனது ஆதிக்கத்தை நிலைநிறுத்தியுள்ளது.

இந்துக்களின் போர் என வர்ணிக்கப்படும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கும், கொழும்பு இந்துக் கல்லூரிக்கும் இடையிலான 13 ஆவது சமர் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்தில் நேற்றுக்காலை ஆரம்பமானது.

11

## இளங்கோவன் பதவியேற்பு



யாழ்ப்பாணம், மார்ச் 16
வடக்கு மாகாணசபையின் பிரதம செயலாளராக எல். இளங்கோவன் கடமைகளை உத்தியோகபூர்வமாக நேற்று பொறுப்பேற்றார்.

கைதடியிலுள்ள வடக்கு மாகாண சபையின் அலுவலகத்தில் நேற்றுக்காலை பதவியேற்பு

02



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கைதானோரை...

வவுனியா வெடுக்குநாறிமலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தில் மகாசிவராத்திரி வழிபாடுகளில் ஈடுபட்டிருந்தபோது ஆலயப் பூசகர் உட்பட 8 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்தனர். அவர்கள் எதிர்வரும் 19ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். அவர்கள் மீது பொய்வழக்குகள் சுமத்தப்பட்டுள்ளதாகக் குற்றம் சுமத்தப்படுகின்றது. இந்தநிலையில் அவர்களை விடுவிக்கக் கோரி நல்லூர் கந்தசுவாமி ஆலயப் பின் வீதியில் கடந்த திங்கட்கிழமை போராட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது. இருப்பினும் அவர்கள் விடுவிக்கப்படாத நிலையில் வவுனியா, நெடுங்கேணியில் நேற்று மாபெரும் பேரணி ஒழுங்கமைக்கப்பட்டு நடத்தப்பட்டிருந்தது.

**பிரதேச செயலகத்தில் மனு**

நெடுங்கேணி நகர சந்தியில் ஆரம்பித்த கண்டனப் பேரணி, நெடுங்கேணி - புளியங்குளம் வீதி ஊடாக சென்று வவுனியா வடக்குப் பிரதேச செயலகத்தை அடைந்தது. பிரதேச செயலகத்தின் முன்பாக கவனவீர்ப்புப்போராட்டம் முன்னெடுக்கப்பட்டதுடன் அதன் நிறைவில் உதவிப் பிரதேச செயலரிடம் மனு கையளிக்கப்பட்டது. அங்கிருந்து பேரணியாகச் சென்ற போராட்டக்காரர்கள் வனவளத் திணைக்கள அலுவலகத்துக்கு முன்பாகவும் கவனவீர்ப்புப் போராட்டத்தை நடத்தினர்.

**பொலிஸ் நிலையம் முற்றுகை**

அதன் பின்னர் சந்தேகநபர்களைக் கைது செய்த நெடுங்கேணிப் பொலிஸ் நிலையத்தை போராட்டக்காரர்கள் முற்றுகையிட்டனர். இதனால் அங்கு பதற்றமான சூழல் ஏற்பட்டிருந்தது. போராட்டக்காரர்களைக் கண்டதும், பொலிஸ் அதிகாரிகள் வருகை தந்து கலந்துரையாட முற்பட்டனர். அதற்கு மறுப்புத் தெரிவித்த பொதுமக்கள் "உங்களோடு கதைப்பதற்கு இனி எதுவும் இல்லை, முதலில் கைது செய்தவர்களை விடுவித்துவிட்டு கதைப்பதற்கு வாருங்கள்" எனத் தெரிவித்தனர். அவர்களுக்கு முன்பாக பொலிஸ் அராஜத்தை நிறுத்துங்கள், பொய்யான வழக்குகளைப் போடாதீர்கள், உங்களிடம் நீதி இல்லை என மக்கள் கோஷமிட்டனர்.
இதேவேளை - போராட்டம் காரணமாக விசேட அதிரடிப்படையினர் பொலிஸ் நிலையத்துக்கு வரவழைக்கப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது.
பொலிஸ்நிலையம் முன்பாக சுமார் அரை மணிநேரம் ஆர்ப்பாட்டத்தை மேற்கொண்ட மக்கள் பின்னர் அங்கிருந்து சென்று பேருந்து நிலையத்தில் கண்டனப் போராட்டத்தை நிறைவு செய்தனர்.

**மனித உரிமைகள் ஆணைக்குழு முற்றுகை**

இதேவேளை - கைது செய்யப்பட்டு சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களின் உறவினர்கள் நேற்றையதினம் சிறைக்குச் சென்று அவர்களைப் பார்வையிட்டுள்ளனர்.
இதன்போது ஐவர் உணவு தவிர்ப்புப் போராட்டத்தை மேற்கொள்வதால் அவர்களது உடல்நிலை மோசமடைந்து செல்வதாகத் தெரிவித்தனர். இதனையடுத்து இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் வவுனியா பிராந்திய அலுவலகத்துக்குச் சென்றனர். அங்கு நிறைவேற்று அதிகாரிகள் எவரும் இருக்கவில்லை. கடமையில் இருந்த அலுவலர்களும் மக்களுடன் கலந்துரையாடாமல் அலுவலகத்தினுள்ளே இருந்தனர். ஆத்திரமடைந்த பொதுமக்கள் ஆணைக்குழு அலுவலகம் முன்பாக போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனையடுத்து ஒரு மணிநேரத்தின் பின்னர் அலுவலர்கள் வருகைதந்து மக்களுடன் கலந்துரையாடியதுடன்,
சிறைச்சாலைக்கு இன்று சென்று தடுப்பில் உள்ளவர்களை நேரடியாகப் பார்வையிடுவதாக உறுதியளித்தனர்.
போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் ஆணையாளர் தூங்குகின்றாரா? இந்த அலுவலகம் சிங்களவருக்குமட்டுமா? ஏன் பக்கச்சார்பாகச் செயற்படுகிறாய்? மனித உரிமை ஆணைக்குழுவே பதில் சொல் போன்ற கோஷங்களை எழுப்பியிருந்தனர்.

**தடைகள்**

நெடுங்கேணியில் நேற்று கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்ததாவது:-
ஆதிலிங்கேஸ்வரர் ஆலயம் கடந்த 2017ஆம் ஆண்டிலிருந்து கடுமையான அச்சுறுத்தல்களை எதிர்கொண்டு வருகிறது. தொல்லியல் திணைக்களமும், பொலிஸாரும் இணைந்து இவ்வாலயத்தில் இடம்பெறும் வழிபாடுகளுக்குப் பல்வேறு விதமாகத் தடைகளை ஏற்படுத்தி வருகின்றனர். நீதிமன்ற அனுமதியின்படி வழிபாடுகளில் ஈடுபடக்கூடத் தடையேற்படுத்தப்பட்டு வருகின்றது. கடந்த சிவராத்திரி தினத்தன்று ஆலயச் சூழலில் சிவபக்தர்கள் மீது பொலிஸார் மேற்கொண்ட வன்முறையும், அதனைத் தொடர்ந்து இடம்பெற்ற கைதுகளும், சிறைப்படுத்தல்களும் தமிழ் மக்களாகிய எமது மனங்களை வேதனைப்படுத்துகின்றன. தமிழ் மக்களின் வழிபாட்டு மரபையும், வழிபாடுகளையும் அவமானத்துக்குள்ளாக்கியுள்ளது. இலங்கையின் அரசமைப்பில் அங்கீகரிக்கப்பட்டுள்ள மதவழிப்பாட்டுச் சுதந்திரமானது வெடுக்குநாறிமலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தின் வழிபாட்டு விடயத்தில் முற்றாக மீறப்பட்டுள்ளது. ஆலயத்தில் வழிபாடு செய்ய முயற்சிக்கும் போதெல்லாம் விசாரணைகளும், கைதுகளும் மாத்திரமே தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படுகின்றன. எங்கள் மீது ஏவப்படும் மத வழிபாட்டு உரிமை மீறலை சர்வதேச சமூகம் கண்டிப்பதோடு, சிவராத்திரி வழிபாட்டின்போது கைதுசெய்யப்பட்ட எட்டுப்பேரையும் விரைந்து விடுதலை செய்யவும் நடவடிக்கை எடுக்கவேண்டும் எனக் கோரிக்கை முன்வைக்கின்றோம் - என்றனர்.
வெடுக்குநாறிமலை ஆதிசிவன் ஆலய நிர்வாகத்தால் ஒழுங்கமைக்கப்பட்ட இந்தக் கண்டன ஆர்ப்பாட்டப் பேரணியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான சி.சிறீதரன், இ.சார்ள்ஸ் நிர்மலநாதன், வினோநோகராதலிங்கம், தமிழ்த் தேசிய மக்கள் முன்னனியின் நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன், பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான மக்கள் எழுச்சி இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் வேலன் சுவாமிகள், கிறிஸ்தவ மதகுருமார், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், வடமாகாணசபை முன்னாள் உறுப்பினர்களான செந்தில்நாதன் மயூரன், ஜி.ரி.லிங்கநாதன், ம.தியாகராஜா, து.ரவிகரன், சிவில் சமூகச் செயற்பாட்டாளர்கள், பொது மக்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

**வாகனப் பேரணி**

கைது செய்யப்பட்டவர்களை விடுவிக்கக் கோரிப் பாதிக்கப்பட்டவர்களின் உறவுகளின் ஏற்பாட்டில் இன்று சனிக்கிழமை காலை 7.30 மணியளவில் நல்லூர்க் கந்தசுவாமி ஆலய முன்றிலிலிருந்து வவுனியா நோக்கிய வாகனப் பேரணி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. வாகனப் பேரணியாக வவுனியா நோக்கிச் சென்று இன்று முற்பகல் 10 மணியளவில் வவுனியா நகரில் இடம்பெறும் மாபெரும் கவன வீர்ப்புப் போராட்டத்திலும் கலந்து கொண்டு சிறையில் வாடும் தமது உறவுகளை மீட்க ஒத்துழைப்பு வழங்குமாறு பாதிக்கப்பட்டவர்களின் உறவுகள் அழைப்பு விடுத்துள்ளனர். (அ-ஒ-18-66-110)

## கோத்தாவே...

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தனது நூலில் கூறியுள்ளமைக்கு அவரைத் தேர்தலில் களமிறக்குவதற்காகப் பாடுபட்ட தயான் ஜெயதிலக கண்டனம் தெரிவித்துள்ளார்.
ஆங்கில ஊடகம் ஒன்றில் தயான் ஜெயதிலக எழுதியுள்ள விமர்சனத்தில், 'அரகலய' போராட்டத்தில் பங்கேற்றவர்கள் சிங்கள - பௌத்த கிராமப்புற விவசாயிகளின் பிள்ளைகள். கோத்தாவின் திட்டங்கள் காரணமாக கிராமப்புறங்களிலிருந்த படையினரின் குடும்பங்களும் உறவினர்களும் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருந்தனர். கோத்தாவே குற்றவாளி. எனவே கோத்தாவை யாரும் வெளியேற்றவில்லை. ஆயுதமற்ற மக்கள் சக்தியின் மூலமே அவர் வெளியேற்றப்பட்டார் - என்றார். (அ-ஒ-6)

## வழிபாட்டுரிமையைத்...

இது தொடர்பில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊழியர் சங்கம் நேற்று வெள்ளிக்கிழமை மாலை வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-
வெடுக்குநாறிமலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தில் வழிபாட்டில் ஈடுபட்டிருந்த 8 பேர் கைது செய்யப்பட்டு தொல்லியல் சட்டத்தின் கீழ் பொய்க் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுத் தடுப்புக் காவலில் வைத்துள்ள செயலை மிக வன்மையாகக் கண்டிக்கின்றோம்.
தமிழர்களுடைய பாரம்பரிய பண்பாட்டு வழிபாட்டிடங்களைப் பௌத்தமதம் சார் தொல்பொருள் சின்னங்களாக அடையாளப்படுத்தி அந்தப் பிரதேசங்களை அரச கட்டமைப்பின் உதவியுடன் பௌத்த - சிங்களப் பேரினவாதிகள் தொடர்ச்சியாக ஆக்கிரமித்து வருகின்றனர்.
கடந்த வருடம் இதேகாலப்பகுதியில் தொல்பொருள் திணைக்களத்தின் கட்டுப்பாட்டில் காணப்பட்ட இதே வெடுக்குநாறி ஆதிசிவன் ஆலயத்தின் விக்கிரகங்கள் அனைத்தும் உடைத்தெறியப்பட்டன. இனம்தெரியாத நபர்களால் செய்யப்பட்ட குறித்த சம்பவம் தொடர்பில் ஒருமுறையான விசாரணை செய்யப்படவோ அல்லது இதுவரை யாரும் கைது செய்யப்படவோ இல்லை. ஆனால், சிவராத்திரி தினமன்று தங்களின் மரபுசார் வழிபாட்டிடத்தில் அமைதியான முறையில் வழிபாடுகளைச் செய்த சைவத் தமிழ்மக்களை பொய்யான குற்றச்சாட்டில் கைது செய்துள்ளனர். இது எவ்வகையில் நியாயமானது?
அரசாங்கம் தமிழ்மக்களின் பாரம்பரிய இடங்களை சிங்கள - பௌத்த மயமாக்கி தமிழ்மக்களின் வழிபாட்டுரிமையைத் தடைசெய்வதன் மூலம் இந்த இலங்கைத் தீவில் வாழும் தமிழ்மக்கள் மீது பாண்பாடு மற்றும் கலாசாரம் சார்ந்த கட்டமைக்கப்பட்ட ஒரு பண்பாட்டு இனப்படுகொலையைத் தொடர்ச்சியாக மேற்கொண்டுவருகின்றது. இலங்கை பெரும் பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கித் தவிக்கின்றபோதும் இவ்வாறான செயற்பாடுகளுக்கு அரச கட்டமைப்புகள் முன்னிற்கின்றன.
இலங்கைத் தீவில் நீடித்து நிலைத்த சுபீட்சமான வாழ்க்கையையும், அமைதியையும் விரும்பும் அனைவரும் இன, மத பேதமின்றி ஒன்றுபட்டு இவ்வாறான செயற்பாடுகளை எதிர்க்கவேண்டும். அத்துடன் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்றத்திலும், ஏனைய அரசியல் பிரதிநிதிகள் மற்றும் பொது அமைப்புகள் அனைவரும் ஒன்றுபட்டு இவற்றுக்கு எதிராகப் போராடுவதுடன் இனிவரும் காலங்களில் இவ்வாறான செயற்பாடுகள் இடம்பெறாது தடுக்க வேண்டும். அத்துடன் பொய்யான குற்றச்சாட்டுகளில் தடுப்புக் காவலில் உள்ளோர் உடனடியாக விடுவிக்கப்படவும் வேண்டும் என நாங்கள் அரசைக்கோரி நிற்கின்றோம் - என்றுள்ளது. (அ-ஒ-66)

## கொக்குத்தொடுவாய்...

சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.
இது தொடர்பில் துணைத்தூதுவர் டக்ளஸ் சொனக் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில்;
அமெரிக்கத் தூதரகம் தலைநகரில் மட்டுமன்றி அதற்கு வெளியே வாழும் தேவைகளுடைய மக்களுக்கு உதவ முன்வந்துள்ளது. இலங்கையின் வடக்கு - கிழக்கு மாகாணங்களுக்குப் பயணம் மேற்கொண்டுள்ளோம். அம்பாறையில் தொடங்கிய எமது பயணம் மட்டக்களப்பு, திருகோணமலை, முல்லைத்தீவு, கிளிநொச்சியென நீடித்திருந்த நிலையில் யாழ்ப்பாணத்துக்கு வந்துள்ளோம்.
எமது பயணத்தின்போது அரச அதிகாரிகள், சிவில் அமைப்பினர், வர்த்தகர்கள், பொது அமைப்புகள் என பல்வேறுபட்ட தரப்பினரையும் சந்தித்திருந்தோம். எமது சந்திப்பு மூன்று விடயங்களை முன்நிறுத்தியதாக இருந்தது.
பொருளாதாரம், பேச்சு - கருத்து - ஒன்றுகூடுதல் சுதந்திரம், மனித உரிமைகள் மற்றும் ஜனநாயகம் உட்பட அடிப்படை சுதந்திரங்கள் மற்றும் சமூகமேம்பாடு ஆகியன குறித்ததாக இருந்தது.
பொருளாதார நெருக்கடியால் பணவீக்கம், வாழ்க்கைச் செலவு உயர்வால் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்நிலையில் 'யு.எஸ்.எய்ட்' ஊடாக சத்துணவுத் திட்டம், கல்வி உள்ளிட்டவற்றை மேற்கொண்டு அமெரிக்கா உதவுகின்றது. மேலும், கண்ணிவெடியை அகற்றுவதற்கும் அமெரிக்கா உதவிகளை வழங்குகின்றன.
எமது முல்லைத்தீவுப் பயணத்தின்போது கண்ணிவெடி அகற்றும் பகுதிகளுக்குச் சென்றோம். கண்ணிவெடி அகற்றப்பட்ட பாதுகாப்பான இடத்தை பொதுமக்கள் பயன்படுத்த சந்தர்ப்பம் கிட்டியுள்ளது. முல்லைத்தீவில் நாம் காணாமல் ஆக்கப்பட்டோர், கொக்குத்தொடுவாய் புதைகுழி விவகாரத்துடன் தொடர்புடைய சட்டத்தரணிகளையும் சந்தித்திருந்தோம்.
பேச்சு - கருத்து - ஒன்று கூடும் சுதந்திரம், மனித உரிமைகள் மற்றும் ஜனநாயகம் குறித்து அரசாங்கத்திடம் அமெரிக்கா வலியுறுத்தி வருகின்றது - என்றார். (அ-ஒ-5-6)

## இளங்கோவன்...

நிகழ்வு இடம்பெற்றது. வடக்கு மாகாண அமைச்சுகளின் செயலர்கள், பிரதிப் பிரதம செயலர்கள், திணைக்களத் தலைவர்கள், மதகுருமார்கள், நலன் விரும்பிகள் எனப் பலர் கலந்து கொண்டிருந்தனர். (அ-ஒ-20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புனர்வாழ்வளிப்பு பணிக்கு முப்படைகள் இனி இல்லை!



## சிறைச்சாலை அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு

**கொழும்பு, மார்ச் 16**

**புனர்வாழ்வளிக்கும் செயற்பாடுகளிலிருந்து முப்படையினரை முற்றாக அகற்றி, அவர்களுக்குப் பதிலாக இந்தத் துறையில் நிபுணத்துவம் பெற்றவர்களை இணைத்துக் கொள்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று நீதிமன்ற மற்றும் சிறைச்சாலை அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் அனுராத ஜயரத்ன தெரிவித்துள்ளார்.**

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இராஜாங்க அமைச்சர் மேலும் தெரிவித்ததாவது:- இந்த வருடத்துக்குள் வீட்டுக்காவல் முறைமை நடைமுறைப்படுத்தப்படும். இதனூடாக அரசாங்கத்தின் செலவுகளைக் கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். புனர்வாழ்வளிப்பதற்கு தற்போதுள்ள புனர்வாழ்வளிப்பு நிலையங்கள் போதுமானவையல்ல. எனவே அவற்றின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய கந்தளாய் பழைய சீனித் தொழிற்சாலைக்குரித்தான 22 ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ள 22 கட்டடங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. அதேபோன்று வவுனியாவில் ஒன்றிணைந்த புனர்வாழ்வளிப்பு நிலையத்தினூடாக ஒரே சந்தர்ப்பத்தில் 100 பெண்களுக்கு புனர்வாழ்வளிப்பதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது - என்றார். (ச-இ)

# ஹரி ஆனந்தசங்கரியை காணவில்லை!

## சுவரொட்டிகளால் பரபரப்பு

ஒட்டாவா, மார்ச் 16

கனேடிய நாடாளுமன்ற உறுப்பினரும், அமைச்சரும், ஈழத்தமிழ் பூர்வீகத்தைக் கொண்டவருமான ஹரி ஆனந்தசங்கரியைக் காணவில்லை என்று கனடாவில் பரவலாக ஒட்டப்பட்டுள்ள சுவரொட்டிகளால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

கனடாவில் வாழும் பலஸ்தீனச் சமூகத்தினரால் இந்தச் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன. காஸாவில் பலஸ்தீனர்களுக்கு எதிராகக் கடுமையான இராணுவ நடவடிக்கைகளை இஸ்ரேல் மேற்கொண்டுவருகின்ற நிலையில், ஹரி ஆனந்தசங்கரி அதற்கெதிராகக் குரல்கொடுக்காது மௌனமாக இருப்பதைக் கண்டித்தே இந்தச் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

ஈழத்தமிழர்களுக்காகக் குரல்கொடுக்கும் ஹரி ஆனந்தசங்கரி, அவ்வாறான துயரங்களை சமகாலத்தில் சந்தித்துக் கொண்டிருக்கும் பலஸ்தீன மக்களுக்காகவும் குரல்கொடுக்க வேண்டும் என்று கனேடிய வாழ் பலஸ்தீனர்கள் தெரிவித்துள்ளனர். (ம)

# வாய்க்கால் ஆக்கிரமிப்பு ஆளுநருக்கு முறைப்பாடு

நூறு வருடங்களுக்கு மேல் பாவனையில் இருந்த வெள்ளநீர் வழிந்தோடக்கூடிய வாய்க்கால் தனியாரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளமை தொடர்பில் மக்களால் வடக்கு ஆளுநருக்கு முறைப்பாடு செய்யப்படவுள்ளது.

சாவகச்சேரி நகரசபையின் மண்டுவில் வட்டாரத்தில், வாய்க்காலின் கிழக்குப் புறத்திலுள்ள காணியைக் கொள்வனவு செய்த புலம்பெயர் நாட்டிலிருந்து வந்த ஒருவர் வீடு அமைப்பதற்கு 14 அடி ஒழுங்கையை வாய்க்காலின் அருகில் அமைத்துள்ளார். 11 அடி அகலமான வாய்க்காலை மூடி மண்போட்டுள்ளார்.

இது தொடர்பாக தென்மராட்சிப் பிரதேச செயலகம், சாவகச்சேரி நகரசபை மற்றும் விவசாயத் திணைக்களம் ஆகியவற்றில் அப்பகுதியில் வதியும் 100 க்கும் மேற்பட்ட மக்கள் கையொப்பமிட்டு பல தடவைகள் எழுத்து மூலம் கடிதங்கள் வழங்கிய போதிலும் அதிகாரிகள் எவரும் நடவடிக்கை எடுக்கத்தவறியதால் மாகாண ஆளுநருக்கு முறைப்பாடு செய்யவுள்ளனர். (ஒ-9)

# வரி செலுத்தாத விளம்பரத்தட்டிகள் மன்னார் நகரசபையால் அகற்றல்!

மன்னார் நகரசபை எல்லைக்குள் அமைக்கப்பட்டு வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வர்த்தக நிலையங்களில் உரிய அனுமதி பெற்று வரி செலுத்தாது காட்சிப்படுத்தப்பட்ட விளம்பரப் பலகைகள் மன்னார் நகரசபை ஊழியர்களால் அகற்றப்பட்டுள்ளன.

மன்னார் நகரசபையிடம் உரிய வரி செலுத்தி அனுமதி பெறாது உள்ளூர் வர்த்தக நிலையங்களில் நீண்ட நாள்களாகக் காட்சிப்படுத்தப்பட்டிருந்த பல்வேறு நிறுவனங்களின் விளம்பரக் காட்சிப் பலகைகள் வர்த்தக நிலையங்களில் இருந்து அகற்றப்பட்டுள்ளன.

அவற்றுக்கு அனுமதி பெற்று வரியைச் செலுத்தி காட்சிப்படுத்துமாறு நகரசபையால் அறிவுறுத்தல் வழங்கப்பட்டு, கடிதங்கள் அனுப்பப்பட்டு உரிய அனுமதியைப் பெறாத வர்த்தக நிலையங்களின் விளம்பரப் பலகைகள் மேற்கண்டவாறு அகற்றப்பட்டுள்ளன. (ஒ-56)

# கஞ்சாவுடன் ஒருவர் கைது

2 ஆயிரத்து 290 மில்லிகிராம் கஞ்சாவை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் இணுவில் பகுதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் சுன்னாகம் பொலிஸாரால் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்ட இளைஞருக்கு எதிராக, மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ப-125)

# கசிப்புடன் இளைஞர் கைதானார்

கசிப்பினை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் இளவாலைப் பகுதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் இளவாலைப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பொலிஸார் குறித்த நபரிடமிருந்து ஐந்து லீற்றர் கசிப்பினைக் கைப்பற்றியுள்ளனர். இதனையடுத்து, குறித்த இளைஞருக்கு எதிராக மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்து மேலதிக விசாரணைகளை [illegible] துள்ளனர். (ப-125)

# புதினம் தெரியுமோ?

ரணில் ஜனாதிபதித் தேர்தலில போட்டி போடுவாரா? இல்லையா? எண்டதை விடவும் இப்ப இஞ்சத்தை ஆக்கள் யாழ்ப்பாணம், கிளிநொச்சி அடுத்த 'ஜீ.ஏ.' ஆர் எண்டு அறியிறதிலதான் கடும் ஆர்வமா இருக்கினம். நேற்றும் பட்சி உந்த விசயத்தைப் பற்றிச் சொன்னது. அதுக்குப் பிறகு சாடைமாடையா சில தகவல்கள் காதில விழுந்தது. ரணிலும் இந்த விசயத்தில இறங்கியிருக்கிறார் எண்டதுதான். ஆனால் அவர் நேரடியா இறங்கேலை. தனக்கு நம்பிக்கையான ரவி கருணாநாயக்கவைத்தான் இந்த அலுவலைப் பாக்கச் சொல்லியிருக்கிறாராம். இடையில கொஞ்சக் காலம் மனக்கசப்பில ஐக்கிய தேசியக் கட்சியை விட்டு ஒதுங்கியிருந்த ரவி கருணாநாயக்கதான் இப்ப ரணிலுக்கு அடுத்ததா அந்தக் கட்சியை ஆட்டிப்படைக்கிறாராம். அவ்வளவு ஏன், ரணிலுக்கு கன விசயங்களில அட்வைஸ் பண்ணுறதும் ரவி கருணாநாயக்கதான்.

இப்ப அதே ரவி கருணாநாயக்கட்டதான் கிளிநொச்சி, யாழ்ப்பாணத்துக்கு அடுத்த 'ஜீ.ஏ' ஆரெண்டு டிசைட் பண்ற பொறுப்பைக் குடுத்திருக்காம். அந்தாளும் இந்த விசயத்தில இப்ப தீயா வேலை செய்யிறாராம். தனக்கு நெருக்கமான எம்.பி.மார், அதிகாரியளிட்ட ரவி கருணாநாயக்க நேரடியா போன் பண்ணி, அடுத்த 'ஜீ.ஏ.'க்கு ஆரைப் போடலாம் எண்டு அவையின்ர நாடி பிடிச்சுப் பாத்திட்டு, அதைப்பற்றி உடனேயே ரணிலுக்கும் அப்டேட் பண்றாராம். அநேகமா அடுத்த கிழமைக்குள்ள இந்த ரண்டு மாவட்டத்துக்கும் புது 'ஜீ.ஏ'யை போட்டிடுவினம் போல கிடக்கு. வடக்கில இருந்து ஆரும் ரணிலுக்கும், ரவி கருணாநாயக்கவுக்கும் திருப்தியா இல்லாததால கொழும்பில இருக்கிற ஒரு தமிழ் அதிகாரியைத்தான் யாழ்ப்பாணத்துக்கு 'ஜீ.ஏ'யா போட இருந்தவையாம். ஆனால் அந்த அதிகாரி மாட்டன் எண்டிட்டாராம். 'யாழ்ப்பாணத்தில ஒவ்வொருத்தரும் ஒவ்வொரு அரசியல். அப்பிடி அரசியல் அழுத்தத்துக்க என்னால வேலை செய்யமுடியாது' எண்டு அந்தாள் வெட்டு ஒண்டு துண்டு ரண்டாச் சொல்லிப் போட்டுதாம். அதால அவரை விட்டிட்டு, இப்ப பழையபடி வடக்கிலயே அடுத்த 'ஜீ.ஏ' ஆரெண்டு தேடுற படலம் தொடங்கியிருக்கு.

அதில இன்னொரு விசயமும் கிடைச்சது. ரவி கருணாநாயக்க அடுத்ததா ஆரை கிளிநொச்சிக்கும், யாழ்ப்பாணத்துக்கும் 'ஜீ.ஏ'யா போடலாம் எண்டு அபிப்பிராயம் கேட்டவரெல்லோ. அப்ப அவருக்கு ஆரைப் போடலாம் எண்டதை விடவும், ஆரையெல்லாம் போடக்கூடாது. ஏன் போடக்கூடாது எண்டு 'போட்டுக்குடுத்தவை' தான் கூடவாம். இப்பிடி எல்லாரும் எல்லாருக்கும் குழிபறிச்சால், கடைசியா சிங்கள ஆளைத்தான் அவங்கள் 'ஜீ.ஏ'யா போடுறாங்களோ தெரியாது.

-பட்சி


padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

பிறப்பு 26 . 12 . 1935

இறப்பு 13 . 03 . 2024



## வீரகத்தி நடராஜா

எழுதுமட்டுவாளைப் பிறப்பிடமாகவும் எழுதுமட்டுவாள், கொழும்பு, கனடா (Toronto) ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட வீரகத்தி நடராஜா அவர்கள் கடந்த (13.03.2024) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் வீரகத்தி-முத்துபிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், சின்னத்துரை-சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும், அசோகராணி அவர்களின் அன்புக் கணவரும், பாஸ்கரன் (பாபு), பிரபாகரன் (பிரவு), யசோதை (யசோ), துஷ்யந்தி (துஷி), அனசூயை (அனு) ஆகியோரின் அன்புத் தந்தையும், யசோதா, ரேணுகா, தயாபரன், வசந்தராஜ், கேசவன் ஆகியோரின் அன்பு மாமனாரும், ஆர்த்தி, அருணன், பிரணவன், அர்ஜீன், அனுஷ்கா, சேயோன், யஸ்மிகா, மாயோன், சத்தியன், ரோகிணி, ஆதவன், ஹரிணி, நிருபா, ஆதித்யன் ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான செல்வராஜா, சேனாதிராஜா மற்றும் தியாகராஜா (பிரித்தானியா), காலஞ்சென்ற நாகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும், விமலாதேவி (கனடா), காலஞ்சென்ற மேரி மற்றும் குலமணி (பிரித்தானியா), காலஞ்சென்ற சிதம்பரநாதன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (17.03.2024) ஞாயிற்றுக்கிழமை கனடாவில் நடைபெறும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: ந.பாலகிருஷ்ணன்**
**19, கலட்டி முந்தல் லேன்,**
**கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.**

(CS 282041 A-1

# இந்திய மீனவர்கள் 15 பேர் கைதாகினர்

யாழ்ப்பாணம், மார்ச் 16
இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் 15 இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதுடன், ஒரு படகும் கைப்பற்றப்பட்டது.

யாழ்ப்பாணம் - காரைநகர் கடற்பரப்பில் கடற்படையினர் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின் போதே மீனவர்கள் நேற்று அதிகாலை கைது செய்யப்பட்டுள்ளனர். கைதுசெய்யப்பட்டுள்ள இந்திய மீனவர்களை காங்கேசன்துறை கடற்படை முகாமுக்கு அழைத்துச் சென்றுவிசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அவர்களை ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. (ம-26-100)

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. செய்தி கிடைக்கும். பிள்ளைகளால் மகிழ்ச்சி உண்டாகும். புதிய முயற்சிகளை வியாபாரத்தில் விற்பனை அதிகரிக்கும்.

**இடபம்:** மனதில் தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். காரிய அனுகூலம் உண்டாகும். தாயிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சகோதர வகையில் சிறுசிறு சங்கடங்கள், வீண் செலவுகள் ஏற்படக்கூடும்.

**மிதுனம்:** பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. ஆதாயம் கிடைக்கும். வீண்செலவுகள் ஏற்படும். மகிழ்ச்சி உண்டாகும். காரியம் ஒன்று அனுகூலமாக முடியும். வியாபாரத்தில் இலாபம் கூடுதலாகக் கிடைக்கும். மகிழ்ச்சி கூடுதலாகும்.

**கடகம்:** உற்சாகமாகக் காணப்படுவீர்கள். பிள்ளைகளின் செயற்பாடுகள் வீட்டில் கலகலப்பான சூழ்நிலையை ஏற்படுத்தும். உறவுகளால் நன்மை உண்டாகும். பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**சிம்மம்:** தேவையான பணம் கையில் இருக்கும். காரியங்கள் முடிவதில் தாமதம் ஏற்பட்டாலும் முடித்து விடுவீர்கள். உதவி கிடைக்கும். உறவினர்கள் மூலம் கிடைக்கும் தகவல் மகிழ்ச்சி தரும். விற்பனையும் இலாபமும் எதிர்பார்த்தபடியே இருக்கும்.

**கன்னி:** புதிய முயற்சிகளைத் தவிர்ப்பது நல்லது. மனம்விட்டுப்பேசி உற்சாகப்படுத்துவீர்கள். கனிவான அணுகுமுறை அவசியம். வேங்கடேச பெருமாளை வழிபட, நன்மைகள் அதிகரிக்கும். செலவு ஏற்படும்.

**துலாம்:** உற்சாகமான நாள். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். உங்கள் முயற்சிகளுக்கு ஒத்துழைப்பு கிடைக்கும். செலவுகளில் திட்டமிடுதல் அவசியம். விற்பனையும் இலாபமும் அதிகரிக்கும்.

**விருச்சிகம்:** காரியங்களில் சிறுசிறு தடைகள் ஏற்படலாம். எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. எதிர்பார்த்த பண உதவி கிடைக்கும். வியாபாரத்தில் இலாபம் கிடைக்கும். நன்மைகள் அதிகரிக்கும்.

**தனுசு:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். ஆனால், திடீர் செலவுகளால் கையிருப்புக் கரையும். மகிழ்ச்சி ஏற்படும். தேவையற்ற சில பிரச்சினைகள் ஏற்பட்டு நீங்கும்.

**மகரம்:** எதிர்பாராத அதிர்ஷ்ட வாய்ப்புகள் ஏற்படும். உறவினர்களால் சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும். உடல்நலனில் கவனம் தேவை. எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகும். உறவுகளுக்காகச் செலவு செய்ய வேண்டி வரும்.

**கும்பம்:** எதிர்பார்த்த உதவி கிடைக்கும். குடும்பத்துடன் இறைவழிபாட்டில் ஈடுபடும் வாய்ப்பு ஏற்படும். சில சங்கடங்கள் ஏற்படக்கூடும். நற்பலன்கள் அதிகரிக்கும். இடையூறுகள் விலகும். மனஸ்தாபம் ஏற்படும். பொறுமை அவசியம்.

**மீனம்:** எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். உறவினர்களுக்காக செலவு செய்ய நேரிடும். சங்கடங்களைச் சமாளிக்கவேண்டி வரும். மனவருத்தம் ஏற்படக்கூடும். பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

# மோ.சைக்கிள் தீயிட்டு எரிப்பு

யாழ்., மார்ச் 16
அச்சுவேலி, நவக்கிரியில் வீடொன்றில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள் நேற்று அதிகாலை 1.30 மணியளவில் தீயிட்டு எரிக்கப்பட்டுள்ளது.

மோட்டார் சைக்கிளில் வந்த மூவர் வீட்டினுள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளை பெற்றோல் குண்டு வீசி தீயிட்டு எரித்து வீட்டின் ஜன்னல்கள், கதவுகள் என்பவற்றையும் கூரிய ஆயுதங்களால் உடைத்துச் சேதமாக்கியுள்ளனர்.

சம்பவம் தொடர்பாக அச்சுவேலி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (அ-ஒ-23)



# சோதனைகள் சாதனைக்கே

'சோதனையை மனவுறுதியுடன் தாங்குவோர் பேறுபெற்றோர்' (யாக் 1:12) சோதனைகள் தவிர்க்கமுடியாதவை என்றாலும் அவற்றை எந்த மனநிலையுடன் சந்திக்கின்றோம் என்பதைப் பொறுத்தே நம் வாழ்வின் உயர்வும், தாழ்வும், மகிழ்ச்சியும், இகழ்ச்சியும் அடங்கியுள்ளது.




இயேசுவும் சோதிக்கப்பட்டார். ஆனால் அவர் சோதனைகளுக்கு அடிமையாகிவிடவில்லை. மாறாக அதனை எப்படி எதிர்கொள்ளவேண்டும் என்று எமக்கு மாதிரிகை தந்துள்ளார். சோதனைகள் வரும்போது தான் ஒரு மனிதனுடைய சுயரூபம் வெளிப்படும். அவனுடைய ஆற்றல் சோதிக்கப்படும். அவனுடைய கொள்கைக்குச் சவால் விடுக்கப்படும். அவனுடைய இலட்சியத்துக்கு உரமேற்றப்படும்.

அறச்செயல்கள் புரிந்து, தவக்காலத்தை எமக்கும், எம் நாட்டுக்கும், முழு உலகுக்கும், அமைதியளிக்கும் ஒரு பொற்காலமாக மாற்றுவோம்.

**அருட்தந்தை. றமேஸ் அ.ம.தி**

# மெய்வன்மை

*யாழ்ப்பாணம், மார்ச் 16*
*அளவெட்டி அருணோதயக் கல்லூரியின் இல்ல மெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டி, கல்லூரி மைதானத்தில் கல்லூரி முதல்வர் ம.மகேந்திரம் தலைமையில் இன்று சனிக்கிழமை பி.ப. 1.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.*
*நிகழ்வில் பிரதம அதிதியாக ஓய்வுநிலை முன்னாள் அதிபர் நா.கேதீஸ்வரன் கலந்துகொள்ள வுள்ளார். (ப-63)*

# ஒன்றுகூடல் மற்றும் கவிதைப் பயிலரங்கு

பச்சிலைப்பள்ளி, மார்ச் 16
வடமாகாண கலாசார அபிவிருத்தித் திணைக்கள அனுசரணையுடன் பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலகம் மற்றும் பிரதேச கலாசாரப் பேரவை ஆகியவற்றின் ஏற்பாட்டில், பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலக மண்டபத்தில் கலைஞர்கள் ஒன்றுகூடல் மற்றும் கவிதைப்பயிலரங்கு நிகழ்வு என்பன எதிர்வரும் 19 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மு.ப. 9 மணிக்கு நடைபெறவுள்ளன. பிரதேச செயலர் இ.ஜெயசீலன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில், கலைஞர்களின் ஆற்றுகையும், சான்றிதழ் வழங்கலும் இடம் பெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (ப-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## இடர் அபாயக் குறைப்பு செயற்றிட்ட செயலமர்வு

**கிளிநொச்சி, மார்ச் 16**

பூநகரிப் பிரதேசசபைக்கான உள்ளூராட்சிமட்ட இடர் அபாயக் குறைப்புச் செயற்றிட்ட தயாரிப்பின் இறுதிச் செயலமர்வு கிளிநொச்சி மாவட்ட செயலக இடர் முகாமைத்துவப் பிரிவின் ஒருங்கமைப்பில் கடந்த புதன்கிழமை நடைபெற்றது.

நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட இடர் முகாமைத்துவப் பிரிவின் உதவிப் பணிப்பாளர் சி.கோகுலராஜா, பூநகரி பிரதேச உதவித் திட்டமிடல் பணிப்பாளர் எஸ்.அருள்செல்வன், இடர் முகாமைத்துவப் பிரிவின் உத்தியோகத்தர்கள், பூநகரிப் பிரதேச செயலகத் திட்டமிடல் பிரிவு உத்தியோகத்தர்கள், உள்ளூராட்சித் திணைக்கள உத்தியோகத்தர்கள் எனப் பல்வேறு தரப்பினரும் கலந்துகொண்டனர். (எ-13)

## முறிப்புக்குளம் பகுதியில் மணல் அகழ்வு தீவிரம்!

### தடுக்க நடவடிக்கை எடுக்குமாறு அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை

**முல்லைத்தீவு, மார்ச் 16**

**முள்ளியவளை கமநலசேவைத்திணைக்களத்தின் கீழ் உள்ள முறிப்புக்குளத்தின் அலகரைப்பகுதியில் சட்டவிரோத மணல் அகழ்வுச் செயற்பாடுகள் தீவிரமாக இடம்பெற்று வருகின்றன என்று அந்தப்பகுதி மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.**

இதுதொடர்பில் அந்தப் பகுதி விவசாயிகள் தெரிவித்ததாவது:

முறிப்புக்குளத்தின் அலகரைப்பகுதியில்தொடர்ச்சியாகசட்டவிரோதமாக மணல்அகழப்பட்டுவருகின்றது. இதனால் அலகரை குளப்பகுதியில் பெரியபள்ளங்கள்தோண்டப்பட்டுள்ளதுடன், போக்குவரத்துச் செய்ய முடியாத நிலையில் வீதிகளும் காணப்படுகின்றன. இந்தச் சட்டவிரோத நடவடிக்கைகள் தொடரும் பட்சத்தில் அது குளத்துக்கும் வீதிக்கும் பெரும் பாதிப்புகளை ஏற்படுத்துவதுடன், பிரதேசத்தின் இயற்கை வளத்தை சீர்குலைப்பதாக அமையும்.

எனவே இதுதொடர்பில் அதிகாரிகள் விரைந்து செயற்படவேண்டும் - என்றனர். (ஒ-19)

## வட்டுக்கோட்டையில் விபத்து; ஓட்டோச் சாரதி காயம்

**யாழ்ப்பாணம், மார்ச் 16**

வட்டுக்கோட்டைச் சந்தியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற விபத்தில் ஓட்டோச் சாரதி தலையில் காயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

காரைநகரிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த பயணிகள் தனியார் போக்குவரத்து பேருந்து வட்டுக்கோட்டைச் சந்தியைக் கடக்க முற்பட்டது. இதன்போது அராலி தெற்குப் பக்கத்தில் இருந்து வந்த வெதுப்பக பொருள்கள் விற்பனை செய்யும் ஓட்டோ வேகக் கட்டுப்பாட்டை இழந்து அருகேயுள்ள வெற்றுக் காணியினுள் இருந்த கற்களின் மேல் பாய்ந்தது.

முச்சக்கர வண்டியின் சாரதி தலையில் காயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார். பேருந்தில் பயணித்த பயணிகள் பயணத்தை மேற்கொள்வதில் சிரமங்களை எதிர்நோக்கினர். (ஒ-27)

## சிறைக்கைதிகளால் ரூ.116 மில்.வருவாய்!

**கொழும்பு, மார்ச் 16**

சிறைக்கைதிகளின் பங்களிப்பின்மூலம் கடந்த 2023 ஆம் ஆண்டு 116 மில்லியன் ரூபா வருமானம் ஈட்டப்பட்டுள்ளது என்று நீதித்துறை மற்றும் சிறைச்சாலை விவகார இராஜாங்க அமைச்சர் அனுராத ஜயரத்ன தெரிவித்துள்ளார்.

சிறைச்சாலைகளிலுள்ள கைதிகளை நாட்டுக்குப் பயனுள்ள குழுவாக மாற்றும் வகையில் அரசு மற்றும் தனியார் துறையினரின் பங்களிப்புடன், சிறைச்சாலைகளுக்குள்ளேயே அவர்கள் தொழில்களில் ஈடுபடுத்தப்படுகின்றனர். வெலிக்கடை, மஹர மற்றும் அகுனுகொலபெலஸ்ஸ சிறைச்சாலைகளில் இந்தத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு பாதணிகள், நுளம்புச் சுருள்கள் உள்ளிட்ட பல பொருள்கள் தயாரிக்கப்படுகின்றன என்றும் அவர் தெரிவித்தார். (ச-இ)

## புகையிலைப் பாவனை; தினசரி 50 இறப்புகள்!

நாட்டில் புகையிலைப் பாவனை காரணமாக ஒரு நாளில் சராசரியாக 50 உயிரிழப்புகள் பதிவாகின்றன என்று மதுசாரம் மற்றும் போதைப்பொருள் தகவல் நிலைய நிறைவேற்றுப் பணிப்பாளர் சம்பத் டி சேரம் தெரிவித்தார்.

நாட்டில் பதிவாகும் மரணங்களில் 83 சதவீதமானவை தொற்றா நோய் காரணமாக ஏற்படுபவை. தொற்றாநோய்கள் ஏற்படுவதற்கான 4 காரணங்களில் புகையிலைப் பாவனை பிரதான இடம் வகிக்கின்றது என்றும் அவர் தெரிவித்தார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் தேசம் பிழைத்திருக்க அணிதிரள்வே வழிவகுக்கும்!

## தமிழ் சிவில் சமூக அமையம் வலியுறுத்து

**யாழ்ப்பாணம், மார்ச் 16**


**அழிவின் விளிம்பிலுள்ள எமது தேசம் பிழைத்திருப்பதற்குரிய வாய்ப்புக்கு எம் மத்தியில் ஏற்படும் விழிப்புணர்வும், இவ்வாறான அணிதிரள்வும் மட்டுமே வழிவகுக்கும் எனத் தமிழ் சிவில் சமூக அமையம் வலியுறுத்தியுள்ளது.**

இதுதொடர்பாக தமிழ் சிவில் சமூக அமையம் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

அரசின் அனுசரணையிலான விவசாயக் குடியேற்றத்திட்டங்கள் போலவே தமிழர் பகுதிகளில் இவ்வாறு பௌத்த தொல்பொருள் சின்னங்களைக் கண்டடைவது என்பதுவும், தமிழர்களின் தாயகத்தைச் சிங்களக் குடியேற்றங்கள் மூலம் ஆக்கிரமிப்பதற்கான முதற்படியாக எப்போதும் இருந்து வருகின்றமையே தமிழ்மக்கள் மத்தியில் தமது இருப்புத் தொடர்பான அச்சத்தை ஏற்படுத்தக் காரணமாகின்றது. இவ்வாறான பல நூற்றுக்கணக்கான வேலைத்திட்டங்களுள் வெடுக்குநாறிமலை ஆதி லிங்கேஸ்வரர் ஆலய விவகாரமும் ஒன்று.

இதுவரை நடத்தப்பட்ட நீதிமன்ற வழக்குகளில் தமிழ்மக்களின் பக்கமுள்ள நியாயத்தை எடுத்துக்காட்டுவதாகவே தீர்ப்புகள் வழங்கப்பட்டு வந்துள்ள நிலையிலும், விடாக்கண்டனாகத் தொல்பொருளியல் திணைக்களமும், பொலிஸாரும் எவ்வாறேனும் தமிழ்மக்களை வெடுக்குநாறிமலையிலிருந்து நிரந்தரமாக வெளியேற்றும் நோக்குடன் குதர்க்கமான, நியாயமற்ற நடவடிக்கைகளில் தொடர்ந்தும் ஈடுபட்டு வருகின்றன. இவ்வாறான சிங்கள-பௌத்த பேரினவாத நிகழ்ச்சி நிரல்களையும், அதன் வழியிலான அருவருக்கத்தக்க, அழிவுகரமான ஆக்கிரமிப்புகளையும், மனித உரிமை மீறல்களையும் கண்டித்துக் கண்டித்து தமிழ்மக்கள் களைத்து விட்டார்கள்.

தமிழ் மக்கள் இவ்வாறான தேசிய இருப்பு மீதான அனைத்து வகை அழிப்பு நடவடிக்கைகளுக்கும் எதிராக மத, பிராந்திய வேறுபாடுகள் இன்றி ஒற்றுமையாக அணிதிரள வேண்டியமையே இன்றைய காலத்தின் தேவையாகும் - என்றுள்ளது. (ம-66)



## வெப்பநிலை உயர்வு; மின்தடைக்கு வாய்ப்பு

கொழும்பு, மார்ச் 16

மவுஸ்ஸாக்கலை, காசல்ரீ, லக்ஷபான நீர்மின்சார வளாகத்தின் கீழுள்ள இரண்டு நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் வெகுவாகக் குறைந்து வருகிறது என்று நீர்த்தேக்கங்களுக்குப் பொறுப்பான பொறியியலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

அதிகரித்துள்ள வெப்பநிலை மற்றும் கடுமையான வறட்சி காரணமாக மவுஸ்ஸாக்கலை மற்றும் காசல்ரீ ஆகிய இரண்டு நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் 25 சதவீதமாகக் குறைந்துள்ளது. இந்த நிலைமை தொடர்ந்தால் மின்தடை ஏற்பட வாய்ப்புகள் உள்ளன என்றும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (ச-இ)

# மருத்துவமனைகளுக்கு தரமற்ற மருந்துகள்!

## கெஹலியவுக்கு மறியல் நீடிப்பு

கொழும்பு, மார்ச் 16

முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவுக்கு விதிக்கப்பட்டிருந்த விளக்கமறியல் மேலும் நீடிக்கப்பட்டுள்ளது.

தரமற்ற புற்றுநோய் எதிர்ப்பு மருந்துகள் நாட்டிலுள்ள மருத்துவமனைக் கட்டமைப்புக்குள் விநியோகிக்கப்பட்டுள்ளன என்று பிரதி சொலிஸிட்டர் ஜெனரல் லக்மினி கிரிஹாகம நீதிமன்றத்துக்கு சுட்டிக்காட்டியுள்ளதையடுத்தே கெஹலியவின் விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது. சர்ச்சைக்குரிய மருந்து கொடுக்கல் வாங்கல் தொடர்பான வழக்கு மாளிகாகந்த நீதிமன்றில் நேற்றுமுன்தினம் மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.


இதன்போது முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல மற்றும் நால்வருக்கு எதிரான வழக்கு நிறைவடையும் வரை பிணை வழங்குமாறு அவர்களது சட்டத்தரணிகளால் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

கோரிக்கையை ஏற்க மறுத்த மாளிகாகந்த நீதிவான் லோச்சனி அபேவிக்ரம வழக்குடன் தொடர்புடைய சந்தேகநபர்களை எதிர்வரும் 28ஆம் திகதி வரை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (ச-இ)

# நாள்தோறும் இருவர் காசநோயால் இறப்பு

கொழும்பு, மார்ச் 16

இலங்கையில் தினமும் இருவர் காசநோயால் இறக்கின்றனர் என்று தேசிய காசநோய் கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.



இலங்கையில் தொற்றா நோய்களில், காசநோயால் பாதிக்கப்பட்டவர்களே அதிகளவில் உயிரிழந்து வருகின்றனர். கடந்த வருடம் இலங்கையில் 9 ஆயிரத்து 358 பேருக்கு காசநோய் தொற்று புதிதாக ஏற்பட்டுள்ளது. இவர்களில் அதிகளவானவர்கள் மேல் மாகாணத்தைச் சேர்ந்தவர்களாகவே உள்ளனர்.

'காசநோய்க்கு சரியான நேரத்தில் முறையான சிகிச்சையைப் பெற்றுக் கொள்வதன் மூலம் நோயை முற்றாகக் குணப்படுத்த முடியும்' என்று துறைசார் நிபுணரான மருத்துவர் பிரமித சாந்திலதா தெரிவித்துள்ளார். (ச-இ)

'அஸ்வெசும'

# விண்ணப்பிக்கும் காலக்கெடு நீடிப்பு

கொழும்பு, மார்ச் 16

'அஸ்வெசும' நலன்புரித் திட்டத்தின் இரண்டாம் கட்டத்துக்கான விண்ணப்பங்களை சமர்ப்பிக்கும் காலம் நீடிக்கப்பட்டுள்ளது.

அதன்படி மார்ச் மாதம் 22ஆம் திகதி வரை விண்ணப்பங்களை சமர்ப்பிக்க முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

'அஸ்வெசும' இரண்டாம் கட்டத்துக்கான விண்ணப்பங்களை அனுப்பும் காலம் நேற்றுடன் நிறைவடைந்த நிலையிலேயே விண்ணப்பகாலம் நீடிக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

# சுகாதாரத்துறையினர் பணிப்புறக்கணிப்பில்

கொழும்பு, மார்ச் 16

எதிர்வரும் 19 மற்றும் 20ஆம் திகதிகளில் மீண்டும் அடையாள வேலைநிறுத்தத்தில் ஈடுபடுவதற்கு சுகாதார வல்லுநர் சங்கங்களின் கூட்டமைப்பு தீர்மானித்துள்ளது.

72 சுகாதார நிபுணத்துவ சங்கங்கள் முன்னர் ஆரம்பிக்கப்பட்ட தொழில் நடவடிக்கையை நிறுத்தி, பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு சுகாதார அமைச்சுக்கும் நிதி அமைச்சுக்கும் காலஅவகாசம் வழங்கப்பட்டது.

அதற்கமைய கொடுப்பனவுகளை உயர்த்துவதற்கான பிரேரணையை நிதியமைச்சகத்திடம் சுகாதார அமைச்சு வழங்கியுள்ளது. இதுவரை உரிய பதில் கிடைக்கப்பெறாததையடுத்தே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. (ச-இ)

நாடாளுமன்றுக்கு

# கடந்த இரு ஆண்டுகளில் 107 புதிய சட்டவரைவுகள்

கொழும்பு, மார்ச் 16

கடந்த 2022 மற்றும் 2023ஆம் ஆண்டுகளில் 107 புதிய சட்டவரைவுகள் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன என்று நீதி மற்றும் சிறைச்சாலை விவகார இராஜாங்க அமைச்சர் அனுராத ஜயரத்ன தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் அவர் இதனைத் தெரிவித்தார். 2022ஆம் ஆண்டு 29 புதிய சட்டவரைவுகளும், 2023ஆம் ஆண்டு 78 புதிய சட்டவரைவுகளும் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. நீதி அமைச்சின் வரலாற்றில் இந்தக் காலப்பகுதியிலே அதிக எண்ணிக்கையிலான சட்டவரைவுகள் திருத்தப்பட்டுள்ளன என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

# ஐ.எம்.எப். – ஜே.வி.பி. சந்தித்துப் பேச்சு!

கொழும்பு, மார்ச் 16

சர்வதேச நாணயநிதியத்தின் இலங்கைத் தொழிற்பாடுகள் பிரதானி பீற்றர் புறூவர் உள்ளிட்ட குழுவினருக்கும் தேசிய மக்கள் சக்தியின் பிரதிநிதிகளுக்கும் இடையிலான கலந்துரையாடலொன்று நேற்றுமுன்தினம் முற்பகல் கொழும்பு ஷங்கரிலா ஹோட்டலில் நடைபெற்றது.

ஒன்றரை மணித்தியாலம் நடைபெற்ற இந்தச் சந்திப்பில் இலங்கையின் கடன்மறுசீரமைப்பினதும் மோசடி, ஊழல்களைத் தடுத்தலுடன் தொடர்புடைய செயற்பாங்குகளினதும் முன்னேற்றம் தொடர்பில் விரிவாகக் கலந்துரையாடப்பட்டதோடு மக்களுக்கு இதுவரை வழங்கப்பட்டிராத தொழில்நுட்ப ஒத்துழைப்பு அறிக்கை பற்றியும் தேசிய மக்கள் சக்தியின் பிரதிநிதிகளால் எடுத்துரைக்கப்பட்டது. (ஓ-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


உண்மை - நேர்மை - அஞ்சாமை
உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## வெடுக்குநாறிமலை பொதுப்பிரச்சினை

'இலங்கையின் முதல் மதம் இந்துமதமே. இந்து மதம் நிலைகொண்ட பின்னரே இலங்கைக்குள் பௌத்தம் கொண்டுவரப்பட்டது. இதுவே வரலாற்று உண்மை' என்று அழுத்தம் திருத்தமாகத் தெரிவித்துள்ளது கத்தோலிக்க மறைமாவட்ட நீதி சமாதான ஆணைக்குழு. 'வரலாற்றுக்கு முற்பட்ட இந்துமதம், எவ்வாறு பௌத்தத்தை ஆக்கிரமிக்க முடியும்?' என்றும் அந்த ஆணைக்குழு கேள்வியெழுப்பியுள்ளது. நெடுங்கேணி வெடுக்குநாறிமலை ஆதிசிவன் ஆலயத்தில், சிவராத்திரி வழிபாடுகளின்போது பொலிஸார் நடந்துகொண்ட விதம் தொடர்பில் கண்டனங்கள் நாளுக்குநாள் குவிந்துவரும் நிலையில், கத்தோலிக்க மறைமாவட்ட நீதி சமாதான ஆணைக்குழு விடுத்துள்ள கண்டனக் குறிப்பு தனித்துவமானது என்பதுடன், 'குன்றின் மேல் ஏற்றிவைத்த தீபம் போன்று' அமையவேண்டியதாகவும் இருக்கின்றது. ஒரு கத்தோலிக்க அமைப்பான, கத்தோலிக்க மறைமாவட்ட நீதி சமாதான ஆணைக்குழுவின் இந்த அறிக்கையானது, மத சகிப்புத்தன்மையென்பது எவ்வாறு அமையவேண்டும் என்பதை இலங்கைத் தீவுக்குக் காலக்கண்ணாடியாகவும் பறைசாற்றி நிற்கின்றது.

முல்லைத்தீவு குருந்தூர்மலையாக இருக்கட்டும் அல்லது நெடுங்கேணி வெடுக்குநாறிமலையாக இருக்கட்டும் அல்லது கிழக்கிலுள்ள கேந்திரப்பகுதிகளாக இருக்கட்டும், அங்கு மேற்கொள்ளப்படும் பௌத்த பேரினவாத அடக்குமுறைச் சிந்தனையின் பாற்பட்ட செயற்பாடுகள் வெறுமனே இந்து சமயத்துக்கு மட்டுமானவையல்ல. இந்த அடக்குமுறைகளை எதிர்கொள்ளும் மதமாக இந்து மதமும், இந்துக்களும் இருந்தாலும் இதை அனைத்துத் தமிழர்களுக்கும் எதிரான அடக்குமுறையாகவே கொள்ளவேண்டும். அது ஏன் என்பதைத்தான் வெளிப்படையாகவும் பட்டவர்த்தனமாகவும் பேசியிருக்கின்றது கத்தோலிக்க மறைமாவட்ட நீதி சமாதான ஆணைக்குழு. காணாமலாக்கப்பட்டவர்களின் விவகாரம், காணி விடுவிப்பு, அரசியல் கைதிகளின் விடுதலை, பௌத்த பேரினவாதத்தின் நிலவிழுங்கல் செயற்பாடுகள் என அனைத்தும் எவ்வாறு தமிழர்களின் பொதுப்பிரச்சினையாக உள்ளனவோ அதுபோன்றுதான், இந்து வழிபாட்டுத்தலங்கள் மற்றும் இந்து ஆலயங்கள் மீதான ஆக்கிரமிப்பையும் எடுத்துக்கொண்டு அதற்கேற்ப வினையாற்றவேண்டும். ஆனால், இந்தப் புரிதல் தமிழர்தாயகத்தில் அநேகமானவர்களிடத்தில் இல்லை என்பதே கசப்பான உண்மை. 2009 ஆம் ஆண்டுக்குப் பின்னர், மதத்தலங்கள் மீதான ஆக்கிரமிப்பை பொதுப்பிரச்சினையாக எடுத்துக்கொள்ளும் மனப்பாங்கு தமிழ் மக்களிடம் அருகியே வருகின்றது. உண்மையில் இந்த நிலை மாற்றப்படவேண்டும். எதிரி பிரித்தாளும் தந்திரத்தைக் கைக்கொள்வதற்கு 'பொதுப்பிரச்சினையாக' சில விடயங்களை தமிழர்கள் அணுகாதிருப்பதுதான் முதன்மைக் காரணம்.

இங்குள்ள தமிழ்த் தலைமைகளும் தத்தம் கட்சிக் கொடிகளைப் பலப்படுத்துவதில்தான் காலம் கடத்துகின்றனரே அன்றி, அதற்கு அப்பாற்பட்ட 'ஒன்றிணைப்புச் செயற்பாடுகளையோ', செயற்றிட்டங்களையோ அவர்களும் முன்னெடுப்பதாயில்லை. இந்தச் சபிக்கப்பட்ட போக்குக்கு விரைவாக வைக்கப்படும் முற்றுப்புள்ளியே தமிழர்களின் நிலங்களை, வழிபாட்டுத் தலங்களை உயிர்ப்புடன் வைத்திருக்க உதவும். இதேவேளை, கத்தோலிக்கத் தமிழர்களுக்கு எதிராக நடுவீதியில் நின்று கூப்பாடுபோடும் சிலர், சிங்கள -பௌத்த பேரினவாதத்தின் கொடூரத்தனங்களுக்கு எதிராகக் கைகட்டி, வாய்மூடி இருக்கும் இடம் தெரியாமல் காட்டும் விசுவாசத்தையும் தமிழர்கள் கவனித்து வைத்திருக்க வேண்டிய காலமிது.




# டிஜிற்றல் இலங்கை பணக்காரர்களுக்கே!



### சஜித் குற்றச்சாட்டு

**கொழும்பு, மார்ச் 16**

**உயரடுக்கு பெரும் பணக்காரர்களின் பிள்ளைகளுக்கே டிஜிற்றல் இலங்கை உருவாக்கப்பட்டுள்ளது. காலாவதியான கல்வி முறைமையால் பெரும்பாலான துறைகளைச் சேர்ந்தவர்கள் வேலையின்மை வரிசையில் நிற்கிறார்கள் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ சுட்டிக்காட்டியுள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது:- காலாவதியான கல்வி முறைமையினால் ஒருசில துறைகளைத் தவிர, பெரும்பாலான துறைகளைச் சேர்ந்தவர்கள் வேலையின்மை வரிசையில் நிற்கிறார்கள். தனியார் துறையில் கூட அவர்களால்வேலைவாய்ப்பை எடுத்துக் கொள்ள முடியாத நிலை காணப்படுகிறது. உண்மை, தரவு, அறிவியல் மற்றும் பரிசோதனைகள், பகுப்பாய்வுகள் என்பவற்றின் அடிப்படையில் அமைந்த கொள்கை உருவாக்கத்துக்கே ஒரு நாடாக நாம் முன்னேற வேண்டும் - என்றார். (ச-இ)

## நீதிபதிகளுக்கு தட்டுப்பாடு

கொழும்பு, மார்ச் 16
உயர்நீதிமன்றம் உள்ளிட்ட நீதிமன்றங்களில் நிலவும் நீதிபதிகளின் வெற்றிடங்கள் அதிகரித்துக் காணப்படுகின்றன என்று இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

உயர்நீதிமன்ற நீதியரசர்களின் வெற்றிடங்களை விரைவில் நிரப்ப அரசமைப்புப் பேரவை மற்றும் ஜனாதிபதி நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் அந்தச் சங்கம் வலியுறுத்தியுள்ளது. (ச-இ)

## செயலிழப்புக் கருவிகள் சீனாவால் அன்பளிப்பு

வெடிகுண்டுகளைச் செயலிழக்கச் செய்யும் இயந்திரங்கள் சீன இராணுவ உதவித் திட்டத்தின் கீழ் பாதுகாப்பு அமைச்சுக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளன. இலங்கைக்கான சீனத் தூதுவர் கியூ சென்ஹொங், இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் விக்கும் லியனகேவிடம் குறித்த உபகரணங்களைக் கையளித்தார். 18 ரோபோக்கள், வெடிபொருள்களிடமிருந்து பாதுகாக்கக் கூடிய 10 பாதுகாப்பு அங்கிகள், வெடிபொருள்களிடமிருந்து பாதுகாப்புப் பெறக்கூடிய 10 வாயு தாங்கிகள் மற்றும் வெடிபொருள்களைச் செயலிழக்கச் செய்யும் இயந்திரங்கள் என்பன இதன்போது கையளிக்கப்பட்டன. (ச-6)

## நெல் கொள்வனவுக்கு ரூ.50 கோடி ஒதுக்கீடு

நெல்லைக் கொள்வனவு செய்வதற்காக நெல் சந்தைப்படுத்தல் சபைக்கு 50 கோடி ரூபா நிதியை வழங்குவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தீர்மானித்துள்ளார் என்று விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார். அதற்கமைய ஒவ்வொரு மாவட்டங்களிலும் இன்று முதல் குறைந்தது இரண்டு களஞ்சியசாலைகள் திறக்கப்பட்டு நெல் கொள்வனவு மேற்கொள்ளப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

### கடன்களைப் பெற
## சொத்துகள் அபகரிப்பு சட்டம் இடைநிறுத்தம்!

கடனைத் திருப்பிச் செலுத்தாதவர்களிடமிருந்து சொத்துகளைப் பெறுவதற்கும் அவற்றை ஏலம் விடுவதற்கும் நிதி நிறுவனங்களுக்கு அதிகாரம் வழங்கிய 'பராட்டே' சட்டத்தை தற்காலிகமாக இடைநிறுத்தி வர்த்தமானி அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

நாணய, பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கை அமைச்சரின் பணிப்புரையின்படி இந்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது. (ச-இ)

**நாளை**

17.03.2024
**ஞாயிற்றுக்கிழமை**
**பங்குனி – 04**

சுபநேரம் : 09.19 –10.49
ராகுகாலம் : 04.49 – 06.19

**நாளொரு நல்வார்த்தை**

**மகிழ்ச்சி என்ற உணர்ச்சி
இல்லாவிட்டால்
வாழ்க்கை சுமக்க முடியாத
பெரிய சுமையாகிவிடும்.**

– பெர்னார்ட் ஷோ –

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யா/கொக்குவில் இந்து
## சிறகடிக்கும் சிட்டுக்
## தரம் - 5 புலமைப்பரிசில்
# மாணவர்கள் கௌரவிப்ப

### அதிபரின் வாழ்த்துச்செய்தி



**திருமதி கவின்ஜா நவஜீவா**
**அதிபர் - யா/ கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை**

தமது ஆரம்பக் கல்வியை யா / கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலையில் நிறைவுசெய்து நிறைந்த அனுபவங்களுடன் புதிய அத்தியாயத்தை ஆரம்பிக்க உள்ள எமது பிள்ளைகளுக்கு ஆசி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன். எமது பாடசாலையில் அவர்கள் பெற்ற நல்ல அனுபவங்கள், ஆற்றல்கள் என்றும் எம் மாணவர்களின் மனதிலே நிலைத்திருந்து அவர்களை வழிநடத்திச் சென்று தமது உன்னத இலட்சியங்களை அவர்கள் அடைவதற்கு உறுதுணையாக இருக்கவேண்டுமென இறையாசிகளை வேண்டி எதிர் காலத்தில் அவர்கள் அனைவருமே இச்சமூகத்தின் பெறுமதி மிக்க சொத்துக்களாக வாழ வாழ்த்துகின்றேன்.

**யா/கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை**
**சிறகடிக்கும் சிட்டுக்கள் - 2023**



தரம் 5A வகுப்பு மாணவர்கள்

**யா/கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை**
**சிறகடிக்கும் சிட்டுக்கள் - 2023**



தரம் 5B வகுப்பு மாணவர்கள்

**யா/கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை**
**சிறகடிக்கும் சிட்டுக்கள் - 2023**




தரம் 5C வகுப்பு மாணவர்கள்



| | | | | | |
|---|---|---|---|---|---|
| J. POORVIKA<br>Marks -186 | S.GANISHKA<br>Marks -183 | B.THAKSHAKKAN<br>Marks -183 | V. LAKSHIKA<br>Marks -178 | S. VARSINI<br>Marks -178 | S. SAN<br>Marks |



| | | | | | |
|---|---|---|---|---|---|
| D. ABBINESH<br>Marks -169 | J.DIVEKA<br>Marks -168 | B.BANUSAN<br>Marks -168 | A.ARCHCHAYA<br>Marks -168 | J. AKSHAYA<br>Marks -167 | A. PRAH<br>Marks |




| | | | | | |
|---|---|---|---|---|---|
| N. ATHAVAN<br>Marks -164 | N. KIRUSHOTHAN<br>Marks -164 | S. ARAVI<br>Marks -164 | R.ATHIRAN<br>Marks -163 | A.THANSIKA<br>Marks -162 | B. HARI<br>Marks |



| | | | | | |
|---|---|---|---|---|---|
| J. ANJENI<br>Marks -161 | P.PUGALESH<br>Marks -159 | S.SATHURSIGAN<br>Marks -159 | S.ABIKASHINI<br>Marks -159 | U. SARVANY<br>Marks -158 | S.VISHN<br>Marks |



| | | | | | |
|---|---|---|---|---|---|
| M.AKSAJAN<br>Marks -156 | L.DINUJAN<br>Marks -156 | T.SAYNUJAA<br>Marks -155 | J. HAREESH<br>Marks -155 | S.THIVANUSAN<br>Marks -154 | K.ASHM<br>Marks |



| | | | | | |
|---|---|---|---|---|---|
| S.SHARANKI<br>Marks -153 | P.PIRAVEEN<br>Marks -153 | T.AKESHAN<br>Marks -153 | H. HARUNNIYA<br>Marks -153 | S. ABISHANTH<br>Marks -152 | V. MUV<br>Marks |



| | | | | | |
|---|---|---|---|---|---|
| J.SUJANAN<br>Marks -149 | S.LUXAN<br>Marks -149 | N. DIVJAVANTHI<br>Marks -149 | P. VIKASHNI<br>Marks -149 | V.MENUJAN<br>Marks -148 | M.YUWE<br>Marks |



| | | | | | |
|---|---|---|---|---|---|
| N.SHAKANA<br>Marks -146 | S.JANUSAN<br>Marks -146 | P. ABISAYAN<br>Marks -145 | R.GOWSHIGA<br>Marks -145 | S.SANJANA<br>Marks -145 | S. KAS<br>Marks |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வ ஆரம்ப பாடசாலை
## க்கள் - 2023
## ல் பரீட்சை - 2023
## பு விழா - 16.03.2024



| | | | | | |
|---|---|---|---|---|---|
| SANKAVI | J. ROSANKANTH | J.SHARONA | K.HARISANATH | S. HARINIKA | R.ASHMIGA |
| arks -176 | Marks -176 | Marks -174 | Marks -173 | Marks -173 | Marks -172 |



| | | | | | |
|---|---|---|---|---|---|
| PRAHATHI | S.THARANISHA | S.SANSIKA | V.SUTHEERAN | S.ABISHAJAN | K. YAVISHNA |
| arks -167 | Marks -167 | Marks -166 | Marks -165 | Marks -165 | Marks -164 |




| | | | | | |
|---|---|---|---|---|---|
| HARINIHAA | S.SABINAYAN | A.KAVINAYA | M.AKSHAYA | N. SAKANA | P.ABINAYAN |
| arks -162 | Marks -162 | Marks -162 | Marks -161 | Marks -161 | Marks -161 |




| | | | | | |
|---|---|---|---|---|---|
| ISHNUJAN | P.SUBAANY | K. ABIRNA | J.ASHWIN | S. ARRUN | M.AKSHAJAH |
| arks -158 | Marks -157 | Marks -157 | Marks -156 | Marks -156 | Marks -156 |



| | | | | | |
|---|---|---|---|---|---|
| ASHMITHAN | S.SUJANIKA | G.THIPISHAN | S. AMIRTHA | R.SHIRANEY | P. PAVISAN |
| arks -154 | Marks -154 | Marks -154 | Marks -154 | Marks -154 | Marks -153 |



| | | | | | |
|---|---|---|---|---|---|
| MUVINESH | T. KAVINAJAA | P.NAGARUKXANAA | S.AKSHITHA | S.SHATHURI | V.ASHVITHA |
| arks -152 | Marks -152 | Marks -152 | Marks -151 | Marks -150 | Marks -150 |



| | | | | | |
|---|---|---|---|---|---|
| UWENISHA | M. AKSHANA | V. HARITHARAN | B.GHURUCHARAN | S.DAGSHAYAN | S. LAKSHITH |
| arks -148 | Marks -147 | Marks -147 | Marks -146 | Marks -146 | Marks -146 |



| | | | |
|---|---|---|---|
| KASVIN | K. THIUSHAAYINI | T. ANUSGANTH | T. PRANAVI |
| arks -145 | Marks -145 | Marks -145 | Marks -145 |

Congratulations

### யா/கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை
சிறகடிக்கும் சிட்டுக்கள் - 2023




### யா/கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை
சிறகடிக்கும் சிட்டுக்கள் - 2023




### யா/கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை
சிறகடிக்கும் சிட்டுக்கள் - 2023




### யா/கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை
சிறகடிக்கும் சிட்டுக்கள் - 2023




**Sponsor By - J.B.Constructions**
**077 113 8615**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிவிழா வாழ்த்தும் சேவைநலன் பாராட்டும்

Best Wishes

### யா/ உயரப்புலம் மெதடிஸ்ற் மிஷன் வித்தியாலயம்

## அதிபர் உயர்திரு. காசிப்பிள்ளை ரவீந்திரராச

### அதிபர் தரம் 1 (BA, BEd, DSM, SC.Tr)
### (Science Trained)



**சேவை விபரம்:**

முதல் நியமனம் 20.01.1989

**ஆசிரியராக**

யா/ உசன் இராமநாதன் மகா வித்தியாலயம்.
யா/ கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி
யா/ நயினாதீவு ஸ்ரீகணேச கனிஸ்ட ம.வி.
யா/ சென்யோசப் வித்தியாலயம்.

**அதிபர் சேவையில்**

யா/ கலட்டி மெ மி வித்தியாலயம்.
யா/உயரம்புலம் மெ.மி. வித்தியாலயம்.



### மாகாணக்கல்விப் பணிப்பாளரின் மணிவிழா வாழ்த்துச் செய்தி

யா/உயரப்புலம் மெதடிஸ்த மிஷன் வித்தியாலயத்தில் அதிபராக கடமையாற்றி தனது அறுபதாவது அகவையைப் பூர்த்தி செய்து அரச சேவையிலிருந்து ஓய்வு பெற்றுச் செல்லும் மணிவிழா நாயகன் திரு. காசிப்பிள்ளை ரவீந்திரராஜா அவர்களின் சேவையினைப் பாராட்டி வாழ்த்துச் செய்தியினை வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

கடந்த 35 வருடங்களாக கல்விச் சேவையில் ஆசிரியராகவும் ஆளுமைமிக்க அதிபராகவும் மாணவர்களின் கல்வித் தேடலுக்கு உறுதுணையாகவும் வழிகாட்டியாகவும், சாதனைகள் பல அடைவதற்கு முன்னோடியாகவும் செயற்பட்டதுடன் பாடசாலையின் ஒவ்வொரு படிகளையும் திட்டமாக வகுத்து வழிநடாத்தி அதீத அர்ப்பணிப்புடன் பாடசாலையின் வெற்றிக்காக அயராது உழைப்பதோடு மாணவர்களினதும் இயல்புகளையும் தேவைகளையும் அறிந்து அவர்களுக்கு ஏற்ற கற்றல் செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டுமென ஆசிரியர்களை ஊக்கப்படுத்தி இப்பாடசாலை வளர்ச்சிக்காக அயராது பாடுபட்டவராவார்.

இவரது சேவையை பாராட்டுவதுடன் ஓய்வு காலம் சிறப்பானதாக அமைந்து மேன்மேலும் கல்விச் சமூகத்திற்கு பயன்தர வேண்டுமென்றும் அவர்தம் குடும்பத்தாருடன் சீரோடும் சிறப்போடும் நீண்டகாலம் வாழ இறைவனை வேண்டுவதுடன் மேலும் கல்விப் பணி தொடரவும் வாழ்த்துகின்றேன்.

**தி.ஜோண் குயின்ரஸ்,**
**மாகாணக்கல்விப் பணிப்பாளர்.**




### வலயக்கல்விப்பணிப்பாளர் அவர்களின் மணிவிழா வாழ்த்துச்செய்தி

யா/உயரப்புலம் மெதடிஸ் மிசன் வித்தியாலய அதிபர் திரு.காசிப்பிள்ளை ரவீந்திரராசா அவர்கள் தனது சேவையினின்றும் ஓய்வுபெறும் இத்தருணத்தில் அவருக்கு வாழ்த்துச் செய்தியினை வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்

எமது யாழ். கல்வி வலயத்தில் இருக்கின்ற இடைநிலைப்பிரிவு பாடசாலையில் மிகவும் சிறப்பான முறையில் இயங்கிவரும் பாடசாலைகளில் ஒன்றான யா/ உயரப்புலம் மெதடிஸ் மிசன் வித்தியாலய அதிபர், பாடசாலை நிர்வாகத்தின் மீது மிகுந்த கரிசனை கொண்டவர். பாடசாலைக்கு சமூகத்தினால் கிடைக்கக்கூடிய பல்வேறு அனுகூலங்களை பெற்று நல்லதொரு சமூக உறவினை ஏற்படுத்தி சிறந்த முறையில் பாடசாலையின் நிர்வாகத்தினை நடாத்தியவர். மாணவர்களின் கல்விச் செயற்பாடுகள் மட்டுமன்றி இணைபாடவிதானச் செயற்பாடுகளையும் சிறப்பாக முன்னெடுத்த ஓர் அதிபராவார் எம்மால் வழங்கப்படுகின்ற பல்வேறு பணிகளை உரிய காலத்தில் சிறப்பான முறையில் நிறைவேற்றும் ஆளுமை கொண்டவர். அவரது அதிபர் சேவையில் பல மாணவச் செல்வங்களின் உயர்வுக்கு வழிகாட்டியாக இருந்தவரென்பதையும் கல்வியைப் போன்று மாணவர்களின் விளையாட்டுத்திறன் விருத்திக்கும் சிறந்த பங்களிப்பினை வழங்கியவர் என்பதையும் நான் அறிகின்றேன். மேலும் அவர் தென்மராட்சி மண்ணிலே பிறந்து தென்மராட்சி மண்ணின் புகழ்பூத்த யா/ சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் கற்று ஆசிரியராக அதிபராக தனது 35 வருடகால கல்விப்பணியை ஆற்றி இன்று அவர் ஓய்வு பெறுவதையிட்டு நான் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன் அவரது ஓய்வு காலம் சிறக்கவும் வளம்பெறவும் எனது நல்லாசிகளை வழங்குவதில் மகிழ்வடைகின்றேன்.

**திரு. பொ. ரவிச்சந்திரன் வலயக்கல்விப்பணிப்பாளர்.**
**வலயக்கல்வி அலுவலகம்.**
**யாழ்ப்பாணம்.**



### ஆசிச் செய்தி

யா/ உயரப்புலம் மெ.மி.வித்தியாலய அதிபர் திரு. காசிப்பிள்ளை இரவீந்திரராசா அவர்கள் 15.03.2024 அன்று அதிபர் சேவையில் இருந்து ஓய்வு பெறுவது அவர் சார்ந்த மேற்படி பாடசாலைச் சமூகத்தினருக்கு ஆதங்கத்தினை ஏற்படுத்தும் என்பதில் எந்தவித ஐயமுமில்லை.

ஏறத்தாழ ஒரு தசாப்த காலமாக மேற்படி பாடசாலையின் வளர்ச்சிக்கு அயராது உழைத்தவர். அதிபர் சேவையைக் கடமை என்று கருதாது அர்ப்பணிப்புடன் கடமையாற்றியவர் என்றால் அது மிகையாகாது. அதிபர் அவர்கள் மேற்படி பாடசாலையின் அதிபராக பதவி ஏற்றதன் பின்னர் எடுத்த அதீத அக்கறை காரணமாக கல்வியில் மட்டுமல்ல இணைபாடவிதான (நடனம். ஆங்கில பேச்சுப் போட்டி. தமிழ் பேச்சுப் போட்டி. விளையாட்டு) போன்ற செயற்பாடுகளிலும் பாடசாலை சாதனை படைத்ததை சிறப்பாக கூறவேண்டும். இதை விட பரிசளிப்பு விழா. கல்விச் சுற்றுலா என்பவற்றின் மூலம் மாணவர்களுக்கு ஓர் உந்து சக்தியை அறிவுத் திறன் எழுச்சியை உத்வேகத்தை ஏற்படுத்தியவர்.

அதிபர் என்ற பதவியில் இருந்தாலும் அதனை பெருமையாக கருதாது அடக்கத்துடன் கடமை உணர்வு பிறழாது சக ஆசிரியர்களையும் அரவணைத்து நடத்தி அவர்களின் ஒத்துழைப்பையும். நன்மதிப்பையும் பெற்றவர். ஆசிரியர்களை மட்டுமல்ல பெற்றோர்களை, கற்கும் மாணவர்களை, பழைய மாணவர்களை, நலன் விரும்பிகள் போன்ற பல தரப்பினரையும் பாடசாலை சமூகத்தோடு இணைத்து பாடசாலை முன்னேற்றத்திற்கு வழிவகுத்தவர். இவ்வாறு அனைவரையும் ஒருங்கிணைத்து செயற்படுவது என்பது எளிதான செயலன்று.

அவர் ஓய்வு பெற வேண்டியது காலத்தின் கட்டாயம் தவிர்க்க முடியாத ஒரு நிகழ்வு என்றாலும்கூட அவர் செய்த சேவைகளை, பணிகளை அறிந்த பலர் இதயங்களும் இந்த ஓய்வை ஏற்க மறுக்கின்றது. எனினும் ஏற்கத்தான் வேண்டும். இதை சொல்வது எளிது ஆனால் தாங்குவது மனதிற்கு கஷ்டமானது. அவர் ஓய்வு பெற்றாலும் கூட அவரது மனது முழுக்க முழுக்க பாடசாலையே சுற்றி வரும் சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் பாடசாலைக்கு வருகை தந்து பாடசாலையின் எதிர்கால முன்னேற்றத்திற்கு தம் ஆலோசனைகளையும். ஒத்துழைப்பையும் வழங்குவார் என்பதில் எந்தவித ஐயமுமில்லை. இந்த ஓய்வு அவரின் பதவிக்கானதே தவிர மனதிற்கல்ல. எனவே அவர் எல்லாவித நலன்களையும் மேன்மேலும் பெற்று நலமுடன் வாழ வேண்டும் என்று எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்தித்து ஆசி கூறி நிறைவு செய்கின்றோம்.

சுபமஸ்து

**கரைப்பிரான், ஆனைக்கோட்டை.**
**சிவஸ்ரீ சோம சிவகுமாரக்குருக்கள்**
**பிரதம குரு - கரைப்பிரான் ஆதிவிநாயகர் தேவஸ்தானம்.**

Best Wishes

### தென்னிந்திய திருச்சபையின் ஆசியுரை

"தக்கார் தகவிலார் என்பது அவரவர் எச்சத்தாற் காணப்படும்"


"ஒருவர் தகுதியுள்ளவர்அல்லது இல்லாதவர் என்பதை அவருக்குப் பின் எஞ்சி நிற்கும் புகழ் அல்லது பழியால் அறியலாம்" என்ற வள்ளுவன் வாக்கிற்குப் பொருத்தமுற வாழ்ந்தவர் உயர் திரு.காசிப்பிள்ளை ரவீந்திரராசா அவர்கள்.

இந்த மானுட வாழ்க்கையில் கிடைத்தற்கரிய பணியாகக் கருதப்படக்கூடிய ஆசிரியப் பணியை தமது வாழ்விலே முதன்மையாகக் கொண்டு அரும்பணியாற்றியவர் உயர் திரு. காசிப்பிள்ளை ரவீந்திரராசா அவர்கள். இவர் தமது பணித்திறன்விளைவாக 2015ம் ஆண்டிலிருந்து அதிபராக பதவி (SLPSI) உயர்வு பெற்று மாணவர்களுக்கும், சமுதாயத்திற்கும் அரும்பெரும் பணிகளை ஆற்றியுள்ளார்.

"பதவி வரும் போது பணிவு வர வேண்டும் துணிவும் வரவேண்டும் தோழா" என்று ஒரு கவிஞன் பாடுகின்றான். அந்தக் கவி வரிகளுக்கமைய தமது பதவிக்கேற்ற பணிவுடனும், அதேவேளை துணிவுடனும் தமது பணிக்காலம் முழுமையும் கல்விக்காக தம்மை அர்ப்பணித்தமை இவருக்கும். கல்விச் சமூகத்திற்கும் கிடைத்த ஓர் வரப்பிரசாதமாகும். இவரால் பயன்பெற்றவர்கள் தமது வாழ்நாழ் முழுவதிலும் மறக்கமாட்டார்கள்.தமது இதயக் கமலங்களில் வைத்துப் பூசிப்பார்கள். இத்தகைய பெருமைக்குரிய அதிபர் அவர்கள் தமது இளைப்பாறுகைக் காலத்தில் நீடித்த சுகபெலத்துடன் வாழ்ந்து. பூரணத்துவம் காண வாழ்த்துகிறேன். அத்துடன் இவரது வாழ்வு அமைதியும் மகிழ்ச்சியும் நிறைந்ததாக அமைய எல்லாம் வல்ல இறைத் தந்தையின் ஆசியை வேண்டி நிற்கின்றேன். ஆண்டவரின் நிறைந்த ஆசீர்வாதம் அதிபரோடு எப்போதும் நிலைத்திருக்கட்டும்.

**அந்திரேயா பூ.தேவராசா,**
**புனித அந்தோனியார் ஆலயம்,**
**தென்னந்தியத் திருச்சபை,**
**கொக்குவில் மேற்கு, கொக்குவில்.**

Best Wishes




### ஆசிரியர் நலன்புரிக்கழக தலைவரின் ஆசிச்செய்தி

2016ஆம் ஆண்டு எமது பள்ளியைப் பொறுப்பேற்ற முதல்வர்அவர்கள் தனது நிர்வாகத்திறமையாலும், தான் கற்ற கல்வியின் பயனாலும் இப்பாடசாலைக்கு அளப்பெரும் பணியாற்றியுள்ளார். எமது மாணவர்களுக்கு கல்வியில் சம வாய்ப்பபை ஏற்படுத்தி பாடசாலையின் நூலகத்தை அபிவிருத்தி செய்தார். இணைய வசதிகளும், திறன்பலகை கொண்ட கணினி அறை என்பவற்றையும் ஏற்படுத்திக்கொடுத்தார்.

இவருடைய சேவைக்காலத்தில் உடல், உளநலன் மேம்பாட்டிற்காக கரப்பந்து, வலைப்பந்து, பூப்பந்து, மேசைப்பந்து விளையாடும் வசதிகளையும் மாணவர்களுக்கு ஏற்படுத்தி வழங்கியுள்ளார். இவர் காலத்தில் வறிய மாணவர்களை கற்பிப்பதற்காக பல்வேறு உதவிகளை ஆற்றி வந்துள்ளார். கடந்த 2022/2023 க.பொ.த. (சா/த) பரீட்சை முடிவுகள் மிகவும் உயர்ந்து இருந்தமை இவர் காலத்தில் கிடைத்த வெற்றியாகும்.தரம் 1 மாணவர்களை பாடசாலையில் இணைத்துக்கொள்ள இவர் சமூகத்துடன் நெருங்கிய தொடர்பினை ஏற்படுத்தி தரம் 1 வகுப்பறையை வளப்படுத்தினார். இவ்வாறு மிகச்சிறப்பாக பணியாற்றிய எம் பள்ளி முதல்வரை மனதார வாழ்த்தி அவரது ஓய்வுக் காலம் மகிழ்ச்சியாகவும், சிறப்பாகவும் அமைய நயினைத் தாயை பிரார்த்திக்கின்றோம்.

**தலைவர் - ஆசிரியர் நலன்புரிக் கழகம்**



### வாழ்த்துச் செய்தி

இன்று மணிவிழா காணும் அதிபர், நண்பர் திரு.கா.ரவீந்திரராஜா அவர்களை வாழ்த்துவதில் பெருமகிழ்வடைகின்றேன். சக அதிபர்களுடன் நட்புறவுடன் பழகுவதில் அவருக்கு என்று தனியிடம் ஒன்று உண்டு. தன்னிலும் இளையவர்களுடன் நட்புறவோடு பழகுவதிலும் அவருக்கு தனியான இடமுண்டு.

கல்விப் பணியில் 15 வருடங்கள் அதிபர் சேவையாற்றி இன்று மணி விழா காணும் நண்பர் அவர் தன் குடும்பத்துடன் மகிழ்வாக இருக்க எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

**நண்பர்கள் சார்பில்**
**நா.மகேந்திரராசா**
**அதிபர்**
**யா/குளமங்கால் றோ.க.வித்தியாலயம்.**

(CS 24015) A-1

## வாழ்த்துவோர்: பாடசாலைச் சமூகம்
## யா/உயரப்புலம் மெ.மி.வித்தியாலயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆட்சியைப்..

ஒன்று பொதுஜன பெரமுனக் கட்சி. இரண்டாவது தேசிய மக்கள் சக்தி. அதேபோல மக்கள் சக்தி உள்ள இரு கட்சிகள் உள்ளன. ஒன்று ஐக்கிய மக்கள் சக்தி, இரண்டாவது மொட்டுக் கட்சி. ஏற்பாட்டு பலமும், மக்கள் சக்தியும் என இரண்டு பலமும் உள்ள கட்சி பொதுஜன பெரமுனவாகும். இதற்கிடையில் ஜனாதிபதிப் பதவிக்குப் பொருத்தமானவர் எனக் கருதப்படுபவரின் கட்சிக்கு மக்கள் பலமும் இல்லை, ஏற்பாட்டு பலமும் இல்லை.

நாட்டை நிர்வகிக்கக்கூடிய சிறந்த தலைவர் இருத்தல் வேண்டும். ஆனால் மக்கள் ஆதரவு, ஏற்பாட்டு பலம் இல்லாத ஐக்கிய தேசியக் கட்சியில் அந்த வேட்பாளர் இருக்கின்றார். நாட்டுக்கு நன்மை பயக்கவேண்டும் எனில் மக்கள் பலம், ஏற்பாட்டுக் கட்டமைப்பு, சிறந்த வேட்பாளர் என மூன்று விடயங்களும் அவசியம்.

ஐக்கிய தேசியக் கட்சியும், ஐக்கிய மக்கள் சக்தியும் ஒன்றாக இருந்துள்ளன. ஜே.வி.பி.யும் சந்திரிகா அரசில் இருந்துள்ளது. நல்லாட்சியின்போது இணைந்து செயற்பட்டது. எனவே, இந்த மூன்று தரப்புகளும் இணைந்து, நாட்டுக்காக தமது கடப்பாட்டை நிறைவேற்றவேண்டும். நாட்டின் நலன்கருதியும், மக்கள் நலன்கருதியும் இணைய வேண்டிய இடத்தில் இணைந்து செயற்பட நாம் தயாராகவே இருக்கின்றோம். 'அரகலய'வின் போது கூட ஆட்சியமைக்க நாம் எதிரணிகளுக்கு அழைப்பு விடுத்தோம். நாடாளுமன்றத்தில் ஆதரவை வழங்கமுன்வந்தோம்.

தனித்துப் போட்டியிட்டு பின்னர் கூட்டணி அமைக்கலாம் அல்லது கூட்டணி அமைத்து மூன்று தரப்புகளும் களமிறங்கலாம். பிரதமர் வேட்பாளர் பதவி என்பதையெல்லாம் முன்னிலைப்படுத்தக்கூடாது. பெரும்பான்மை ஆதரவு உள்ள தரப்புக்கு முக்கியத்துவம் இருந்தால் நல்லம்.

நான் இந்த யோசனையை முன்வைப்பது தோல்விப் பயத்தால் அல்ல, வடக்கு - கிழக்கில்கூட எமக்கு வாக்குப்பலம் உள்ளது. அதேவேளை, பொதுஜன பெரமுனக் கட்சியில் இருந்து வெளியேறியவர்களையும் இணைத்துக்கொள்வதற்கு முயற்சிக்கின்றோம் - என்றார். (அ-ஒ-44)

## இந்துக்களின்...

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற கொழும்பு இந்துக் கல்லூரி துடுப்பாட்டத்தைத் தெரிவுசெய்தது. நேற்றைய மதியபோசன இடைவேளையில் மிகச் சீரான இடைவெளியில் அந்த அணியின் இலக்குகள் சரிக்கப்பட்டன. மதிய போசனத்துக்காக ஆட்டம் இடைநிறுத்தப்படும்போது 7 இலக்குகளை இழந்திருந்தாலும், மதிய போசனத்தின் பின்னர் அந்த அணியின் பின்வரிசை வீரர்கள் நிதானமாகத் தடுத்தாடினர். இருப்பினும் 80 ஓட்டங்களுக்குள் சகல இலக்குகளையும் அந்த அணி இழந்தது. யாழ். இந்துக் கல்லூரி அணி உதிரி ஓட்டங்களை வழங்கியதுடன் களத்தடுப்பிலும் சில பிடியெடுப்புகளைத் தவறவிட்டிருந்தது.

முதலாவது இன்னிங்ஸை ஆரம்பித்த யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கு ஆரம்ப இணை சிறப்பான அடித்தளத்தை அமைத்துக்கொடுத்தது. இதனால் முதலாம் நாள் ஆட்ட நிறைவில் 4 இலக்குகளை இழந்து 150 ஓட்டங்களைப் பெற்று யாழ். இந்து முன்னிலை வகிக்கின்றது. இன்று ஆட்டத்தின் இறுதி நாளாகும். (அ-ஒ-27)

**நல்லூர்க் கந்தன் திருமண சேவை**

எம்மிடம் சகலவிதமான மணமக்களுடைய ஜாதகங்கள் கைவசம் உண்டு. வெளிநாடு உத்தியோகம், உள்நாடு தனியார் நிறுவனங்கள், சூரியன் செவ்வாய் குறிப்புகள், செவ்வாய் இல்லாத குறிப்புகள் என தாராளம் உண்டு. நீங்கள் விரும்பியவாறு மணமகனோ/ மணமகளோ எம்மால் வேகமாக ஒழுங்கு செய்து தரப்படும்.

தொடர்பு: வி.ஜெயந்தி **077 973 3183**

**காணி விற்பனைக்கு**

காங்கேசன் துறையில்
K.K.S வீதிக்கு முகப்பாக
இரண்டு பரப்பு காணி
உண்டு. ஒரு பரப்பு ஒரு
கோடியே இருபத்தைந்து
இலட்சம்

(CS 41917) S-1

**077 767 6169**

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

இன்று யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் நடைபெறுகின்ற 38ஆவது பட்டமளிப்பு விழாவில் கல்வி முதுமாணிப் பட்டத்தைப் பெறுகின்ற எமது வித்தியாலய ஆசிரியை



**திருமதி சுதாமதி தயாபரன்**
**(NDT (Primary Merit) BA, PGDE, MEd**
அவர்கள் மேலும் பட்டங்களும் பதவி உயர்வுகளும் பெற பாராட்டி வாழ்த்துகின்றோம்.

Best Wishes

**ஆசிரியர் நலன்புரிச் சங்கம்**
**யா/மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலயம்.**
**சாவகச்சேரி.**

(CR 41918) A-1

## மரண அறிவித்தல்

தோற்றம்
01 . 04 . 1947



மறைவு
13 . 03 . 2024

**விஜயரட்ணம் பாக்கியநாதன்**

**முன்னாள் முகாமையாளர் ( Saudi ), Director Myura Homes Pvt Ltd, நிர்வாகசபை உறுப்பினர் - தெல்லிப்பளை துர்க்கா தேவி தேவஸ்தானம்.**

ஆனைக்குட்டிவளவு தெல்லிப்பளையைப் பிறப்பிடமாகவும் உடையார்வளவு புன்னாலைக்கட்டுவனை வதிவிடமாகவும் கொண்ட விஜயரட்ணம் பாக்கியநாதன் அவர்கள் கடந்த 13.03.2024 புதன்கிழமை அன்று கொழும்பில் இறைபாதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற விஜயரத்தினம் - தங்கம்மா தம்பதியரின் புதல்வரும் காலஞ்சென்ற சின்னத்தம்பி - நாகேஸ்வரி தம்பதியரின் மூத்த மருமகனும், சரோஜாவின் (ஓய்வுபெற்ற உப அதிபர்) அன்புக் கணவரும், Dr.வித்தியா (CSTH), Dr.விஜித்தா (UK) ஆகியோரின் அன்புத் தந்தையும், Eng.கோகுலதாஸ் (Structural Engineer), Dr.கோபிநாத் (UK) ஆகியோரின் அன்பு மாமனாரும், மதுமீகா, மதுஷிகா, கேஷ்வினா, சஷ்விந் ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான பரமேஸ்வரி,கமலேஸ்வரி,அப்பாத்துரை, விமலநாதன், ஜெகநாதன், குகநாதன், கமலநாதன் மற்றும் சர்வேஸ்வரியின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான் ஸ்ரீசோமஸ்கந்தர், குலசிங்கம், சந்திரவதனி மற்றும் விநாயகமூர்த்தி, மனோன்மணி, நாகேஸ்வரி, நந்தினி, இரஞ்சிதா, மல்லிகா, ஆனந்தா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று சனிக்கிழமை (16.03.2024) புன்னாலைக்கட்டுவனில் உள்ள அவரது இல்லத்தில் அஞ்சலிக்கு வைக்கப்பட்டு, நாளை ஞாயிற்றுக்கிழமை (17.03.2024) இறுதிக்கிரியை 9.00 am - 11.00 am நடைபெற்று பூதவுடல் தெல்லிப்பளை இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


உடையார்வளவு,
புன்னாலைக்கட்டுவன் தெற்கு, சுன்னாகம்.

தகவல்:
குடும்பத்தினர்.
077 906 8017

(CR41914) J-1

## 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
23 . 08 . 1932



மறைவு
28 . 03 . 2023

**அமரர் கந்தையா தில்லைநாதன்**

**(சுன்னாகம் ஊரிசாட்டி சிவபூதராயர் ஆலய பரிபாலகர்)**

திதி - ஸப்தமி

அன்பினால் எம்மை யாண்டு
அவயத்தை முந்த வைத்து
பண்புடன் வாழச் செய்து
பலவழி காட்டிய அப்பா!
தென்பதம் அடைந்து ஒன்று
ஆண்டது கழிந்த தையா!
பொன்முகம் மறக்கவில்லை - உம்
நினைவிலே வாழுகின்றோம்.

சுன்னாகம் கிழக்கு,
சுன்னாகம்.

குடும்பத்தினர்.

(CS 54932) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம் தமிழ்ச் சங்கம்
இந்திய - இலங்கை நட்புறவுக் கழகத்துடன்
இணைந்து நடத்தும்

INDIA - SRI LANKA FOUNDATION

# சிலப்பதிகார விழா - 2024

- காலம் : 16.03.2024 சனிக்கிழமை
- காலை அமர்வு : 9.00 மணி
- இடம் : நல்லை ஆதீன மண்டபம்

நிகழ்ச்சி நிரல்

மங்கல விளக்கேற்றல்
தமிழ்மொழி வாழ்த்து
செல்வி பிரகஸ்னி கணேசநாதன்
செல்வி சகானா அரவிந்தன்

- வரவேற்புரை : கலாநிதி அருட்செல்வி கிருபைராஜா -முதுநிலை விரிவுரையாளர், நடனத்துறை, சேர் பொன்னம்பலம் இராமநாதன் அரங்காற்று மற்றும் கட்புலக்கலைகள் பீடம்.
- உரை அரங்கம்
- கருப்பொருள் : சிலப்பதிகாரம் மக்கள் வாழ்வியற் காப்பியம்
- அரங்கத் தலைமை : தகைசால் வாழ்நாள் பேராசிரியர் அ.சண்முகதாஸ் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
- வாழ்த்துரை முதன்மை விருந்தினர்: முனைவர் செ. கற்பகம் - நடனத்துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், இந்தியா.

## தலைமை உரை

- உரைகள் :
  1. திரு. வேல் நந்தகுமார் " சிலப்பதிகாரத்தில் ஊரும் நாடும்" விரிவுரையாளர், கோப்பாய் ஆசிரியர் கலாசாலை, யாழ்ப்பாணம்.
  2. திருமதி தர்மினி றஜீபன் "சிலப்பதிகாரம் காட்டும் சமூக இயைபாக்கம்" சமூகசேவை உத்தியோகத்தர், பிரதேச செயலகம், நல்லூர்.
  3. திருமதி செல்வ அம்பிகை நந்தகுமரன் "சிலப்பதிகாரத்தில் பெண்மொழிப் பயன்பாடு" முதுநிலை விரிவுரையாளர், தமிழ்த்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
  4. திரு.ச.பாலசண்முகன் "சிலப்பதிகாரத்தில் விழாக்களும் சடங்குகளும்" விரிவுரையாளர், கோப்பாய் ஆசிரியர் கலாசாலை, யாழ்ப்பாணம்.
- நன்றியுரை : திரு.கருணாகரன் துணைச் செயலாளர், யாழ்ப்பாணம் தமிழ்ச் சங்கம்.

## மாலை அமர்வு : பி.ப. 4.00 மணி
## இடம்: துர்க்கா மணி மண்டபம், நல்லூர்.

- மங்கல விளக்கேற்றல் : Dr.வாசுதேவன் இராசையா (அகில இலங்கை சமாதான நீதவான்) தொழிலதிபர்
- தலைமை : முனைவர் கிருஷாந்தி இரவீந்திரா மேனாள் தலைவர், நடனத் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம், ஸ்தாபக இயக்குநர், நாட்டிய கலாகேந்திரா, உடுவில்.
- மங்கல வாழ்த்து ஆடல்
- நெறியாள்கை : திருமதி கீதாஞ்சலி சுதர்சன் - ஸ்வஸ்திக் கல்லூரி
- தலைமையுரை : முனைவர் கிருஷாந்தி இரவீந்திரா
- முதன்மை விருந்தினர் உரை : முனைவர் செ.கற்பகம் நடனத்துறை, தமிழ்ப் பல்கலைகழகம், தஞ்சாவூர், இந்தியா.
- சங்க இலக்கியக் கற்கைநெறித் தேர்வுச் சான்றிதழ் வழங்கல்
- சிலப்பதிகார நாட்டிய நாடகம்
- உருவாக்கம் : பொன்னாலை சந்திரபாத கலாலாயம்
- நெறியாள்கை : நாட்டிய கலைமணி திருமதி ஸ்ரீதேவி கண்ணதாசன்
- நன்றியுரை : திரு. பா. பாலகணேசன் உப பீடாதிபதி, யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி, நிதிச்செயலர், யாழ்ப்பாணம் தமிழ்ச் சங்கம்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

(cs.54379) (N.1)

## தென்மராட்சி கிழக்கு பல நோக்கு கூட்டுறவுச் சங்கம் (வ-து) கொடிகாமம்
## பணிநிலை வெற்றிடம்

எமது சங்கத்தின் கீழ்க்குறிப்பிடப்படும்
பதவிக்கு தகைமையுள்ள விண்ணப்பதாரிகளிடம்
இருந்து வெளிவாரியாக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பதவி :- களஞ்சிய முகாமையாளர் 208/13 (வெற்றிடங்கள் -05)

சம்பள அளவுத்திட்டம் :- 18360-160x10-170x10-21660 (02/2022 இன் படி)

குறிப்பு:- கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு சுற்று நிருபங்களுக்கு அமைய மேற்படி பதவிக்கு ஏனைய கொடுப்பனவுகளும் வழங்கப்படும்.

**1. தகைமைகள்:**

அ) கூட்டுறவு ஊழியர் 14 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் சம்பந்தப்பட்ட துறையிலான பதவி ஒன்றில் ஆகக் குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம் / கூட்டுறவு ஊழியர் 15 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் சம்பந்தப்பட்டதுறையிலான பதவி ஒன்றில் ஆகக் குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்.

**அல்லது**

ஆ) கூட்டுறவு ஊழியர் சாதாரண தராதரப்பத்திரப் பரீட்சையில் சித்தி / க.பொ.த சாதாரண தரப்பத்திர பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாது சிங்களம்/ தமிழ் உட்பட 3 திறமைச்சித்தியுடன் கணிதம் உட்பட 6 பாடங்களுடனான சித்தி.

**விண்ணப்பிக்கும் முறை** :- மேற்படி பதவிக்கான விண்ணப்பத்தினை சங்கத்தலைமைக் காரியாலயத்தில் பெற்று பூரணப்படுத்தப்பட்டு மேல் கூறப்பட்ட பிரதிகளை இணைத்து கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவிக்கான பெயரினை குறிப்பிட்டு **"தலைவர் தென்மராட்சி கிழக்கு பல நோக்கு கூட்டுறவுச் சங்கம் (வ-து) பருத்தித்துறை வீதி கொடிகாமம்."** என்னும் முகவரிக்கு 30.03.2024 ம் திகதி நண்பகல் 12 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக நேரிலோ **அல்லது** பதிவுத் தபாலிலோ அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

16.03.2024 (cr.41912) (N-I) **தலைவர்**

## தேவை

வீட்டுப் பணிப்பெண் தேவை.

தொடர்புகளுக்கு:

**077 426 6542**

(CS/54388) J-1


## வேலையாள்கள் தேவை

யாழ்நகரில் இயங்கும் வெதுப்பகம் ஒன்றிற்கு பெண் சுத்திகரிப்பாளர் தேவை. அனுபவமுள்ளவர்கள் விரும்பத்தக்கது.

**077 713 1594, 021 222 9402**

# மரண அறிவித்தல்

தோற்றம் 27 . 07 . 1954



மறைவு 13 . 03 . 2024

## மருதையினார் கனகரத்தினம்

நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும், இல 585, பொன்னகர் துணுக்காய் மற்றும் ஆனைக்கோட்டை வடக்கு, ஆனைக்கோட்டையினை வசிப்பிடமாகவும் கொண்ட மருதையினார் கனகரத்தினம் (சின்ராசு) அவர்கள் கடந்த (13.03.2024) புதன்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மருதையினார் - பார்வதிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும், சின்னமணி - காலஞ்சென்ற விக்னேஸ்வரி தம்பதியினரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற சிவகரி அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற பிரதீப், சுஜித்தா, ஜெனார்த்தனன், தேனுகா, ஜெனரூபி, சாருஜன் ஆகியோரின் அன்புத் தந்தையும், நிமல்சன் அவர்களின் அன்பு மாமனாரும், சஷ்வின் அவர்களின் அன்புப் பேரனும், சபாரத்தினம், மகேஸ்வரி, சீவரத்தினம், விஜயரத்தினம், இராசரத்தினம், நகுலேஸ்வரி, சாந்தி ஆகியோரின் பாசமிகு சகோதரனும், ஜெயலட்சுமி, மகேசபிள்ளை, தேவி, பிறேமா, கிருஷ்ணவேணி, காலஞ்சென்ற யோகேஸ்வரன், ஈஸ்வரன், குணசிங்கம், பரராசசிங்கம், சத்தியபாமா, சுமதி, சீவரட்ணம், குமுதினி, ஜெயரட்ணம் ஆகியோரின் அன்பு மைத்துனரும், சறோஜினி தேவி, கருணாதேவி, காலஞ்சென்ற கணேசலிங்கம், தனபாலசிங்கம், ஈஸ்வரிதேவி, வரதராசன், கோமதி ஆகியோரின் அன்புச் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (17.03.2024) ஞாயிற்றுக்கிழமை அன்று ஆனைக்கோட்டையிலுள்ள அவரது இல்லத்தில் மு.ப 10.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக காக்கை தீவு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இத் தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஆனைக்கோட்டை வடக்கு,
ஆனைக்கோட்டை.

(CR 41916) S-1

தகவல்:
**குடும்பத்தினர்.**

ஓம் விராட் விஸ்வப் பிரமனே நமக

# மரண அறிவித்தல்

## நாகராசா கலாநிதி



புங்குடுதீவு 1 ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நாகராசா கலாநிதி நேற்றுமுன்தினம் (14.03. 2024) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சதாசிவம் - சரஸ்வதி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான மாரிமுத்து - தெய்வானை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற நாகராசாவின் அன்பு மனைவியும், கமலதாசன் (செல்வன் - பிரான்ஸ்), சுரேஸ்குமார் (சுரேஸ்) ஆகியோரின் பாசமிகு தாயும், சுகந்தினி (விஜி - ஆசிரியர் புங்குடுதீவு துரைச்சுவாமி வித்தியாலயம்), ஜெயபாலினி ( ஜெயந்தி - சுகாதார உதவியாளர் யாழ். போதனா வைத்தியசாலை) ஆகியோரின் அன்பு மாமியாரும், அபினா, அபிநயா, திவிஷனன், அஸ்வினி, கவிஷனா, துஷாந், சதுஷனா, வர்சா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், விஜயரட்ணம், கந்தசாமி, கண்ணதாசன், காந்தரூபி, சாந்தி, இலங்கைநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (17.03.2024) ஞாயிற்றுக்கிழமை 8.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கேரதீவு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

புங்குடுதீவு
1ம் வட்டாரம்

(CS/54389) J-1

தகவல்:
**குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரு தேர்தல்களையும் ஒரேநாளில் நடத்துக!

## ஐக்கிய மக்கள் சக்தி கோரிக்கை



**கொழும்பு, மார்ச் 16**
**ஜனாதிபதித் தேர்தல் மற்றும் நாடாளு மன்றத் தேர்தல் ஆகிய இரண்டையும் ஒரேநாளில் நடத்துமாறு பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி நேற்றுக் கோரிக்கை விடுத்துள்ளது.**

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் பொதுத்தேர்தலை நடத்தினால் அது பொருத்தமாக அமையும் என மொட்டுக் கட்சியின் நிறுவுநர் பஸில் ராஜபக்ச தெரிவித்துள்ள விடயம் தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷன ராஜகருண இவ்வாறு தெரிவித்தார். (அ-ஒ-44)

### வட்டுக்கோட்டை இளைஞன் கொலை:


## கைதான 4 பேருக்கு விளக்கமறியல் நீடிப்பு

வட்டுக்கோட்டையில் இளைஞனைக் கடத்திப்படுகொலைசெய்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டவர்களில் நால்வரை எதிர்வரும் 28ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு மல்லாகம் நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த திங்கட்கிழமை பொன்னாலைச் சந்தியில் வைத்து மனைவியுடன் பயணித்த இளைஞனை காரில் கடத்திச் சென்ற கும்பல் அவரைக் கொலை செய்திருந்தது. சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் வட்டுக்கோட்டையில் ஒரு இளைஞனைக் கைது செய்தனர். அதேவேளை கிளிநொச்சியில் பதுங்கியிருந்த அராலி பகுதியைச் சேர்ந்த நான்கு பேரைக் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்டவர்களை கடந்த புதன்கிழமை மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தி, கிளிநொச்சியில் கைதான நால்வரிடம் மேலதிக விசாரணைகளை முன்னெடுக்கவேண்டும். அவர்களை 48 மணிநேரம் பொலிஸ் தடுப்பு காவலில் வைத்து விசாரிக்கவேண்டும் என மன்றில் விண்ணப்பம் செய்தனர். பொலிஸாரின் விண்ணப்பத்தை ஏற்ற, மன்று நால்வரையும் 48 மணிநேரம் பொலிஸ் காவலில் வைத்து விசாரிக்க அனுமதி அளித்தது. மற்றைய சந்தேகநபரை எதிர்வரும் 20 ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்க மன்று உத்தரவிட்டது. அத்தோடு அன்றையதினம் அடையாள அணிவகுப்புக்கும் கட்டளையிட்டது.

அந்நிலையில் பொலிஸ் காவலில் தடுத்து வைத்து விசாரணை செய்யப்பட்ட நால்வரையும் நேற்று வெள்ளிக்கிழமை மன்றில் முற்படுத்திய வேளை அவர்களை எதிர்வரும் 28ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்க மன்று உத்தரவிட்டுள்ளது. இதேவேளை - இளைஞன் கடத்தப்படும்போது கடற்படை முகாமில் இருந்த நான்கு கடற்படையினரிடம் பொலிஸார் வாக்குமூலங்களைப் பெற்றுள்ளதாகப் பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ-ஒ-26-27)



கோண்டாவில் வடக்கு ஸ்ரீ முத்துமாரி அம்பாள் சோபகிருது வருட தேர்த்திருவிழா கடந்த சனிக்கிழமை நடைபெற்றது. பல நூற்றுக்கணக்கான அடியவர்கள் புடைசூழ முத்துமாரி அம்பாள் புதிய சித்திரத் தேரில் வீதி உலா வந்து அருள்பாலித்தார். (எ-66)



யாழ். இந்தியத் துணைத்தூதரகத்தின் ஆதரவுடன் தமிழகத்தின் பிரபல கல்வி உளவியலாளர் முனைவர் சரண்யா ஜெய்குமார் பங்கேற்ற செயலூக்க உரை, கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் ரதிலட்சுமி மண்டபத்தில் கலாசாலையின் முதல்வர் ச. லலீசன் தலைமையில் அண்மையில் இடம்பெற்றது. நிகழ்வில் 'தற்கால மாணவர்களுக்குக் கற்பிக்கும் ஆசிரியர்கள் கைக்கொள்ளக்கூடிய உத்திகள்' எனும் தலைப்பில் முனைவர் சரண்யா ஜெய்குமார் உரையாற்றினார். (ப-66)





நெல்லியடி மத்திய கல்லூரியில் எஸ்.தயாபரனின் நிதியனுசரணையில் புனரமைப்புச் செய்யப்பட்ட, திறன் வகுப்பறை கையளிக்கும் நிகழ்வு கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது. நிகழ்வில் விருந்தினர்களாக எஸ்.தயாபரன், பாடசாலை அதிபர் க. கிருஷ்ணகுமார் ஆகியோர் கலந்துகொண்டனர். (ப-100)

திருக்கேதீச்சரம் திருவாசக மடத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற சிவராத்திரி தினத்தன்று அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கத்தினரால் சிவதீட்சை வழங்கப்பட்டது. நிகழ்வில் சிறுவர் முதல் பெரியவர்கள் வரை சிவதீட்சை பெற்றனர். (ப-159)





உடையார்கட்டு மகா வித்தியாலய மெய்வல்லுநர் போட்டி பாடசாலை அதிபர் வி.ஸ்ரீகரன் தலைமையில் அண்மையில் பாடசாலை மைதானத்தில் நடைபெற்றது. நிகழ்வில் முதன்மை விருந்தினராக முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சி.ஜெயகாந்தன் கலந்துகொண்டார். (எ-13)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## போதனா மருத்துவமனையில் குருதி வகைகளுக்குத் தட்டுப்பாடு

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை குருதி வங்கியில் தற்போது அனைத்து வகையான குருதிகளுக்கும் தட்டுப்பாடு நிலவுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

குருதிக் கொடையாளர்கள் மற்றும் புதிதாகக் குருதிக்கொடை வழங்க ஆர்வமுள்ளவர்கள் தினமும் காலை 8 மணி முதல் மாலை 5 மணி வரையான காலப் பகுதியில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் பின் பக்கத்தில் அமைந்துள்ள 12 ஆம் இலக்க நுழைவாயிலின் ஊடாக மருத்துவமனையின் குருதி வங்கிக்கு நேரடியாக வருகைதந்து குருதிக்கொடை வழங்கமுடியும். மேலதிக விவரங்களுக்கு 077 210 5375 எனும் தொலைபேசி இலக்கத்துடன் உடனடியாகத் தொடர்பு கொள்ளுமாறு குருதி வங்கியினர் தெரிவித்துள்ளனர்.

(ஒ-66)

### கனடாவுக்கு வருவோர்

## தஞ்சம் கோரினால் திருப்பி அனுப்பப்படுவர்



கொழும்பு, மார்ச் 16

கனடாவுக்கு சுற்றுலா விசாவில் அல்லது மாணவர் விசாவில் வந்து தஞ்சம் கோரி விண்ணப்பிப்போரும், தொழில்புரிபவர்களும் திருப்பி அனுப்பப்படுவார்கள் என கனேடிய அரசு தெரிவித்துள்ளது.

வழமையான விசா நடைமுறைகளில் எதுவித மாற்றமுமில்லை. எனினும் கனடாவுக்கு சுற்றுலா விசாவில் அல்லது மாணவர் விசாவில் வந்து பின்னர் அகதி அந்தஸ்து கோரிவிண்ணப்பிப்போருக்கும் தொழில்களில் ஈடுபடுவோருக்கும் எதிராகக் கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் உரிய விசாரணைகளின் பின்னர் இவர்கள் திருப்பி அனுப்பப்படுவார்கள் என்றும் கனேடிய அரசு தெரிவித்துள்ளது.

கன்டாவின் தலைநகர் ஒட்டாவாவில் இலங்கை மாணவர் ஒருவர் ஆறு பேரைக் கொலை செய்த சம்பவம் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

(அ-ஒ-6)

**யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம்**

**வருடாந்த பொதுக் கூட்டமும் புதிய நிர்வாகக் குழுத் தெரிவும் (2024-2025)**

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டமும் புதிய நிர்வாகக் குழுத் தெரிவும் எதிர்வரும் 31.03.2024 (ஞாயிற்றுக்கிழமை) காலை 9.00 மணிக்கு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் சபாலிங்கம் அரங்கத்தில் இடம்பெறவுள்ளது. அனைத்து பழைய மாணவர் சங்க அங்கத்தவர்களையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

புதிய நிர்வாகக் குழுவிற்கான தேர்தல் குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட வேட்புமனு பத்திர விபரங்களை எமது **www.jhcobajaffna.com** எனும் இணையத்தளத்தில் பார்வையிடலாம்.

அ.யசீகரன் -செயலாளர் 15.03.2024

(CR 41919) A-1

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

**ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பு**



தோற்றம் 26 . 09 . 1951

மறைவு 13 . 02 . 2024

கடந்த (13.02.2024) செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவர்

**அமரர் சபாரத்தினம் நடராசா**

**(உரிமையாளர் - ராஜன் ஆபரண மாளிகை, சாவகச்சேரி)**

அவர்களின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை இன்று (16.03.2024) சனிக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.**

(CS 28207) A-1

**கண்டி வீதி, சங்கத்தானை,
சாவகச்சேரி.**

**குடும்பத்தினர்.**

**90ஆம் நாள் நினைவஞ்சலி**



பிறப்பு 29 . 12 . 1983

இறப்பு 16 . 12 . 2023

அமரர்

**சிவபாதம் சிவசுதன்**

**(பில்லா சுதன்)**

உன் நினைவால் ஏங்கும்
அம்மா, அப்பா, சகோதரர்கள்
என்றும் உன் நினைவு மறவோம்.

**அம்மா, அப்பா, சகோதரர்கள்**

**076 7095 337**

**கோவில் வீதி, நல்லூர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம்
04 • 04 • 1932



மறைவு
13 • 03 • 2024

## விசுவலிங்கம் மங்களம்

**(8ம் வட்டாரம், நயினாதீவு)**

நயினாதீவு 8ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட விசுவலிங்கம் மங்களம் அவர்கள் கடந்த (13.03.2024) புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற குருநாதர் விசுவலிங்கத்தின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்றவர்களான செல்லையா பொன்னம்மா தம்பதியரின் பாசமிகு மகளும், காலஞ்சென்றவர்களான குருநாதர் - வள்ளியம்மை தம்பதியரின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்ற மகாலிங்கம் மற்றும் பாலசிங்கம், மகேந்திரன், குகநாதன் (கனடா), ரவீந்திரன் (டென்மார்க்), உதயகுமாரன் (ஓய்வு நிலை ஆசிரியர்), செல்வமலர், லோகேஸ்வரி (கனடா), நகுலேஸ்வரி (கனடா), பரமகுருநாதன் (கனடா), நாகேஸ்வரி (கனடா), வள்ளிநாயகி (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், தவராணி, நிர்மலா (கனடா), இராசமலர் (டென்மார்க்), மனோகரி (ஓய்வு நிலை ஆசிரியர்), ஸ்ரீமுருகன், சுந்தரேஸ்வரன் (கனடா), சிவபாலன் (கனடா), விஜிதா (கனடா), சோதிலிங்கம் (கனடா), தேவதாசன் (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், சிவக்கொழுந்து, காலஞ் சென்றவர்களான வடிவேலு, இராசரெத்தினம், தவமணி மற்றும் நீலாம்பிகை, யோகம்மா, தங்கரெத்தினம் மற்றும் தங்கமணி, காலஞ்சென்ற செல்வராசா ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை, சின்னத்துரை, தில்லையம்பலம், அன்னலட்சுமி, மங்களம், சோமசுந்தரம், சுந்தரம்பிள்ளை, லெட்சுமணன், சுப்பையா, வையந்திமலா ஆகியோரின் அன்பு மைத்துனியும், வரப்பிரகாஷ் (தேசிய கல்வியியற் கல்லூரி), ஜீவநந்தினி - உதயரூபன் (கனடா), ஜீவநந்தன் - மாதங்கி (கனடா), பிரியதர்சினி - சதீசன் (கனடா), விதுர்சன் (கனடா), நிஷாந்தன் - கேதீஸ்வரி (டென்மார்க்), கிருசாந்தினி - ராம்குமார் (டென்மார்க்), கிருசாந்தன் (டென்மார்க்), டெனி (டென்மார்க்), சுரண்யா (HNDE) - உமாகரன் (ஆசிரியர்). சஜீவன் - அபினா (லண்டன்), புரந்தகி (HNDA), திருமாறன் - குலறஜனி, அஜந்தா - சுதாகரன் (கனடா), தர்சிகா - ஸ்ரீகீதன், சுசீலா - சுவிவர்ணன் (பிரதேச சபை, நயினாதீவு), வினோத் - பவித்தா (கனடா), வினோறா (கனடா), மாதங்கி - ஜீவநந்தன் (கனடா), சஞ்சீவன் (யாழ்.தபாலகம்), மதுமிதா, கெவின் (கனடா), காலஞ்சென்ற பிரதீபன் - மயூரி (கனடா) மற்றும் பார்த்தீபன் - அமிழ்தினி (ஆசிரியர்), ஜெயதீபன் - நிவேதிதா (சுவிஸ்), சரண்யா - சுஜீவன், சுகன்யா (கனடா), சுமங்கலி, நிகிதா (கனடா). நிதுஷன் (கனடா) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், ஜெய்தேவ், சாய்தேவ், நயினிகா, அனிகா, அனிறா, ஸ்ரீராம், தீபிகா, ஜெயராம், இமையா, நிசாரிகா, பவிஸ், கபிஷன், கபினியா, ஆர்த்மிகா, ஆதீசன், கோபிதர்சன், டுசியா, சிவாகின், பிரவினா, அன்சிகா, அபிநயன், ஆதனா, ஆதீசன், தனுஸ்கா, சபரிஸ், அபிவர்ஷினி, அட்சரன், ஆதித் ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (17.03.2024) ஞாயிற்றுக்கிழமை காலை 6.30 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக நயினாதீவு சல்லிபரவை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**077 930 9220** (CS 28120) S-1 **தகவல்: குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொலிஸார் சுட்டுப்பிடித்த டிப்பர் சாரதிக்கு மறியல்



முல்லைத்தீவு, மார்ச் 16

பொலிஸார் மறித்தபோது நிறுத்தாமல் சென்ற டிப்பரை துப்பாக்கிச்சூடு நடத்தி மடக்கியிருந்தனர். இதனையடுத்து டிப்பர் சாரதி கைது செய்யப்பட்டு நீதிமன் றத்தில் நேற்றுமுற்படுத்தப்பட்ட நிலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

ஒட்டுசுட்டானில் பொலிஸார் மற்றும் விசேட அதிரடி படையினர் இணைந்து நேற்று முன்தினம் மாலை முன்னெடுத்த சோதனை நடவடிக்கையின்போது மாங்குளம் வீதியூடாக ஒட்டுசுட்டான் நோக்கிப் பயணித்த டிப்பர் வாகனத்தை மறித்தபோது அது நிறுத்தாமல் பயணித்துள்ளது. புதுக்குடியிருப்பு நோக்கிப் பயணித்த டிப்பர் வாகனத்தை, கற்சிலைமடுவில் வைத்து பொலிஸார் வாகனத்தின் சில்லுக்கு துப்பாக்கியால் சுட்டு மடக்கிப்பிடித்தனர்.

பிடிக்கப்பட்ட டிப்பரில் எதுவித போதைப் பொருட்களும் மீட்கப்படவில்லை. இருப்பினும் கிளிநொச்சி, தர்மபுரம் பகுதியைச் சேர்ந்த 21 வயதான சாரதி கைது செய்யப்பட்டார். ஒட்டுசுட்டான் - புதுக்குடியிருப்பு வீதியில் மறித்தபோது நிற்காமல் சென்ற நிலையில் 7 வரையான துப்பாக்கி வேட்டுகள் தீர்க்கப்பட்டு பிடிக்கப்பட்டது.

பொலிஸார் மறித்தும் நிற்காமல் சென்ற குற்றச்சாட்டு, சாரதி அனுமதிப்பத்திரம் இல்லாதநிலை, வரி காப்புறுதி இல்லாத உள்ளிட்ட பல குற்றச்சாட்டுகள் முன்வை க்கப்பட்டு முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றில் நேற்று முன்னிலைப்ப டுத்தியபோது சந்தேகநபரை எதிர்வரும் 19ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (அ-ஒ-19)


## காணி விற்பனைக்கு உண்டு

**நெல்லியடி நகரத்தில் 15 பரப்பு (நிலப்பரப்பு) காணி விற்பனைக்கு**

- நெல்லியடி நகரத்திலிருந்து 2 km தூரத்தில்
- விக்கினேஸ்வரா வித்தியாலயத்திலிருந்து 500m தூரத்தில்
- உச்சி அம்மன் கோயில் அருகாமையில்
- 16 அடிப்பாதையுடன் இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- பெற்றோல் செற் முன் வீதியில் 2 Km தூரத்தில் நெல்லியடி
- பொலிஸ் நிலைய அருகாமை வீதியில் 2 Km தூரம்
- குடியிருப்புகள் சூழ உள்ள காணி நன்னீர் ஊற்று நிலம்
- ஒரு பரப்பின் விலை ஐந்து இலட்சம் ரூபாய் மட்டும் (500 000/=)

பார்வையிடும் நேரம் காலை 8.00 மணிமுதல் மாலை 6.00 மணிவரை

தொடர்பு: 071 173 3911 / 076 853 5022

(CS28183) (N-1)

## வீடு வாடகைக்கு உண்டு

வேலணை வங்களாவடி மத்திய கல்லூரிக்கு அருகில் வீடு வாடகைக்கு உண்டு.

076 004 7928

## ஆண் சமையலாளர் தேவை

முழங்காவிலில் அமைந்துள்ள உணவகம் ஒன்றுக்கு ஆண் சமையலாளர் தேவை.

077 967 6403, 074 001 5060

(CS/54386) J-1

## வீடு வாடகைக்கு

மல்லாகம் சந்திக்கு மிக அருகாமையில்
கே.கே.எஸ் வீதியில்
சகல வசதிகளுடனும் வீடு
உடனடியாக
வாடகைக்கு உண்டு.

தொடர்பு:- 077 738 1262
077 376 1845 (Viber)

(CS/54382) J-1

## வேலையாள் தேவை

கொக்குவில் தாவடியில் இயங்கிவரும் பிரபல்யமான அரிசி ஆலை ஒன்றிற்கு கனரக வாகன சாரதி தேவை.

தொடர்பு:- 076 096 9728

(CS/54372) J-1

## விவசாயிகளுக்கு

இந்தோனேசியாவிலிருந்து நேரடியாக எம்மால் இறக்குமதி செய்யப்பட்ட விவசாய மருந்து தெளிகருவி 17 லீற்றர் (Sprayer) சில்வர். பிளாஸ்டிக்காலானதும் பற்றறி இணைக்கப்பட்டதும் மற்றும் இணைக்கப்படாததும் விவசாய ஆராய்ச்சி நிலையத்தினால் (FMRC) அங்கீகாரம் அளிக்கப்பட்டதுமான தெளிகருவியினை உத்தரவாதத்துடனும் விசேட விலைக்கழிவுடனும் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

"எம்மவரின் தெரிவு எமக்கே தெரியும்"



**ஆர்க் . என் . கம்பனி**

- 150, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 021 222 4021
- A9 வீதி, எழுதுமட்டுவாழ். 070 191 3571
- A9 வீதி, பரந்தன் சந்தி, பரந்தன் 021 228 2020

Hotline: 071 535 7799 / 071 973 9917

cs.54290) (N-1)

## ALLIANCE FRANCAISE DE JAFFNA

**af பிரெஞ்சு மொழி**

- யாழ்ப்பாணத்தில் French Embassy கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் Alliance Francaise மட்டுமே.
- அங்கீகரிக்கப்பட்ட Certificates International Diplomas (delf)
- தமிழ் மொழிமூலம் பிரஞ்சு நாட்டு ஆசிரியரினாலும் கற்பிக்கப்படும்
- French Embassy இன் அனுமதியுடன் திருமண அத்தாட்சிப் பத்திரங்கள் தமிழ் மொழி மூலம் மொழி பெயர்ப்புச் செய்து கொடுக்கப்படும். (இங்கே மட்டும்).



021 222 8093 17, Kandy Road, Jaffna


## மரண அறிவித்தல்



தோற்றம் 03 . 03 . 1945

மறைவு 15 . 03 . 2024

**சிவபாலசிங்கம் ரூத் அரியபூசணி**

**( ஓய்வு பெற்ற தாதி இணுவில் மக்லியோட் வைத்தியசாலை )**

ஏழாலை தெற்கு, சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிவபாலசிங்கம் ரூத் அரியபூசணி (ஓய்வு பெற்ற தாதி இணுவில் வைத்தியசாலை) அவர்கள் நேற்று (15.03.2024) வெள்ளிக்கிழமை அன்று கர்த்தருக்குள் நித்திரை யடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அரியநாயகம் - நாகம்மா தம்பதியரின் மூத்த மகளும், காலஞ்சென்றவர்களான செல்லையா - சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற செல்லையா சிவபாலசிங்கம் அவர்களின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்றவர்களான பரமாநந்தன், சச்சிதானந்தம் மற்றும் அரியாநந்தம், விபுலாநந்தம், அரியவதனி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற றிச்சேட் பாலகுமார் மற்றும் பாலதயா, பாலறஞ்சித் (உரிமையாளர், Star Farm) ஆகியோரின் பாசமிகு தாயாரும், தேவசொரூபன் (உரிமையாளர், வைகறை வாணிபம்), சிந்துஜா ஆகியோரின் அன்பு மாமியாரும், தெபோரா, கனிமொழி, மினோரா கனிவிழி, றெபேக்கா ஆருத்தனா, றேமாஅர்த்தனா ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (16.03.2024) சனிக்கிழமை மாலை 3.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, ஏழாலை தெற்கு அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபையின் கல்லறைத் தோட்டத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.


தகவல்:
குடும்பத்தினர்.
077 370 7599
077 579 6046

ஏழாலை தெற்கு,
சுன்னாகம்.

(CS/54387) J-1

## மணிவிழா வாழ்த்தும் சேவைநலன் பாராட்டும்

16.03.2024




**திரு காசிப்பிள்ளை ரவீந்திரராசா**

**( BA,BED,DSM,SLPS-1 )**

அதிபர் - யாழ் / உரப்புலம்
மெதடிஸ் மிஷன் வித்தியாலயம்

அர்ப்பணிப்பும், ஆளுமையும் மிக்க அதிபர் பெருந்தகையே உங்களின் ஓய்வுக்காலம் சிறப்பானதாகவும், மகிழ்வானதாகவும் அமைய தங்களின் 60வது இப் பிறந்தநாளில் வாழ்த்துகிறோம்.

வாழ்த்துவோர்: பாடசாலைச் சமூகம்
யாழ் / உரப்புலம்
மெதடிஸ் மிஷன் வித்தியாலயம்

(CS/28193) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 16.03.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.